Registered as a News Paper in Sri Lanka

பக்கங்கள் 04 விலை ரூ[redacted] 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஹூ மீ ஆடி 1 ஆம் உ செவ்வாய்க்கிழமை (17 - 07 - 1990) ஹிஜ்ரி 1410 ஜுல்ஹஜ் 23 ஓசை 149

## கையிலிருந்ததைப் பையில் போட்டவர் கைநழுவ விட்டார்!


(கோண்டாவில்)


தாயக மீட்பு நிதி விண்ணப்பப் படிவம் கையளிக்கும்போது கையிலிருக்கும் மோதிரம் மற்றவர்களுக்குத் தெரிந்து விடும் என எண்ணி மோதிரத்தைக் கழற்றி வைத்தவர் படிவத்தைக் கையளித்துவிட்டுத் திரும்பி வரும்பொழுது மோதிரம் தொலைந்து விட்டதைக் கண்டு ஏக்கமடைந்தார். கோண்டாவில் பகுதியில் அண்மையில் நடைபெற்ற தாயக மீட்பு நிதிக் கூட்டம் ஒன்றிற்குச் சென்றிருந்த ஓர் ஆசிரியர் விண்ணப்பப் படிவத்தை நிரப்பி விட்டு கையிலிருக்கும் மோதிரத்தை வெளியில் தெரியாதவாறு கழற்றிப் பையிற்குள் (பொக்கெட்) போட்டுக் கொண்டார். விண்ணப்பப்படிவத்தை உரியவர்களிடம் சமர்ப்பித்து விட்டு திரும்பி வந்து பையைத் தொட்டுப் பார்த்தபோது அங்கு வைத்த மோதிரம் தொலைந்து விட்டதை உணர்ந்தார். இதனால் அவர் ஏமாற்றத்துடன் வீடு திரும்பவேண்டி நேரிட்டது. (லோ)

# 4 நாளில் 55தமிழர் படுகொலை

# திருமலையில்படை அட்டூழியம்!









## தமிழர் கொல்லப்படுவதை இந்தியா தடுக்க வேண்டும்

### இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வேண்டுகோள்

(சென்னை)

அப்பாவித் தமிழ் மக்கள் நாளாந்தம் கொல்லப்படுவதைத் தடுத்து நிறுத்தும் வகையில் இந்திய அரசு இலங்கையுடன் தொடர்பு கொண்டு நல்லதோர் அரசியல் தீர்வை உருவாக்க முன்வரவேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் நாடு பிரிவு இந்திய மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது விடயத்தில் பிரதமர் வி. பி. சிங்கும், தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதியும் இணைந்து ஆக்கபூர்வமான நடவடிக்கையினை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சிஇராணுவமுகாமிற்கு உணவு போடும் முயற்சி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி இராணுவமுகாமிற்கு உணவுப் பொதிகள் போடும் முயற்சியில் ஹெலியும், அவ்ரோ விமானமும் சேர்ந்து ஈடுபட்டு வருகின்றன.

நேற்று காலை 11 மணிக்கு இரண்டு அவ்ரோ விமானங்களில் இருந்து உணவுப் பொருட்கள் போடப்பட்டன.

அதைத் தொடர்ந்து மாலை மூன்று மணிக்கு மூன்று அவ்ரோ விமானங்கள் பார்சல்கள் போட்டன. இதே நேரம் ஒரு ஹெலியும் ஒரு அவ்ரோ விமானமும் தாக்குதலை மேற்கொண்டவண்ணமிருந்தன. (ம)

## உணவு ஏற்றச் சென்ற அதிகாரியைக் காணவில்லை

### இராணுவத்தினர் முரண்பட்ட தகவல்

(வவுனியா)

வாழ்வு வேலைக்காக நியமிக்

## ஊமைப் பெண்ணும் மானபங்கம்

(திருக்கோணமலை)

**திருக்கோணமலையில் நிலாவெளியில் ஐம்பத்தைந்து தமிழ்ப் பொதுமக்கள் சிறிலங்கா சிங்கள இராணுவத்தினால் படுகொலை செய்யப்பட்டனர். இரு பெண்கள் இராணுவத்தினால் மானபங்கம் செய்யப்பட்டபின் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.**

திருமலை நிலாவெளிப்பகுதியில் இராணுவத்தினர் பொதுமக்களைக் கைது செய்வதும், சுட்டுக் கொல்வதும் நாளாந்தம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அத்துடன்இராணுவத்தினரும், சிங்கள ஊர் காவற் படையினரும் சேர்ந்து தமிழ்ப்பெண்களைப் பாலியல் வன்முறைக்குள்ளாக்கியுமுள்ளனர்.

நிலாவெளிப் பகுதியில் கடந்த பன்னிரெண்டாம் திகதியன்று இரவு இராணுவத்தினர் முப்பத்தைந்து பொதுமக்களைக் கைது செய்து பின்னர் சுட்டுக் கொன்றுள்ளனர்.

இதையடுத்துமறுநாள்பதின் மூன்றாம் திகதியன்று ஏழு பொதுமக்களையும், பதின்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## "இதே நிலை நீடித்தால் பாரதம் சும்மா இராது"

### சிறிலங்காவுக்கு குஜ்ரால் எச்சரிக்கை

(சென்னை)

இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணத்தில் நிலவும் பிரச்சினை நீடித்துக் கொண்டே போகுமானால் இந்தியா தற்போது போன்று சும்மா பார்த்துக்கொண்டிருக்காது என இந்திய வெளியுறவு அமைச்சர் (தற்போது இராஜினாமாச் செய்துள்ளார்) ஐ. கே. குஜ்ரால் குறிப்பிட்டதாக கருணாநிதி பத்திரிகையாளருக்குத் தெரிவித்தார்.

நாட்டு முதலமைச்சர் கருணாநிதி டில்லி சென்றிருந்தபோது வெளியுறவு அமைச்சரைச் சந்தித்து இலங்கை விவகாரம் தொடர்பாகப் பேசிய

(4 ஆம் பக்கம் பார்க்க)

## நெடுந்தீவுப் படகு மீது கடற்படைதுப்பாக்கிப்பிரயோகம்

திங்கட்கிழமை மாலை பிரயாணிகளுடன் நெடுந்தீவு

கப்பட்டன. இதனால் பிரயாணிகளைக் கரையிறக்க முயற்

## கிளிநொச்சி இராணுவமுகாமிற்கு உணவு போடும் முயற்சி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி இராணுவமுகாமிற்கு உணவுப் பொதிகள் போடும் முயற்சியில் ஹெலியும், அவ்ரோ விமானமும் சேர்ந்து ஈடுபட்டு வருகின்றன.

நேற்று காலை 11 மணிக்கு இரண்டு அவ்ரோ விமானங்களில் இருந்து உணவுப் பொருட்கள் போடப்பட்டன.

அதைத் தொடர்ந்து மாலை மூன்று மணிக்கு மூன்று அவ்ரோ விமானங்கள் பார்சல்கள் போட்டன. இதே நேரம் ஒரு ஹெலியும் ஒரு அவ்ரோ விமானமும் தாக்குதலை மேற்கொண்டவண்ணமிருந்தன. (ம)

# உணவு ஏற்றச் சென்ற அதிகாரியைக் காணவில்லை

## இராணுவத்தினர் முரண்பட்ட தகவல்

(வவுனியா)

வவுனியா நகரத்திற்கு உணவுப் பொருட்கள் ஏற்றிவரச் சென்று காணாமல் போன செட்டிகுளம் குடியேற்ற உத்தியோகத்தர் திரு. எஸ். நாகராசா இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை.

மேற்படி அதிகாரிகாணாமல் போனதையிட்டு, அவரது மனைவியும், அண்ணரும் இராணுவ இணைப்பதிகாரியுடன் தொடர்பு கொண்டபோது இராணுவ இணைப்பதிகாரியினால் முரண்பாடாகப் பேசப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

குறிப்பிட்ட உத்தியோகத்தர், வவுனியா அரசாங்க அதிபரினால் அகதிமக்களின் புனர்வாழ்வு வேலைக்காக நியமிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

# "இதே நிலை நீடித்தால் பாரதம் சும்மா இராது"

## சிறிலங்காவுக்கு குஜ்ரால் எச்சரிக்கை

(சென்னை)

இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணத்தில் நிலவும் பிரச்சினை நீடித்துக் கொண்டே போகுமானால் இந்தியா தற்போது போன்று சும்மா பார்த்துக்கொண்டிருக்காது என இந்திய வெளியுறவு அமைச்சர் (தற்போது இராஜினாமாச் செய்துள்ளார்) ஐ. கே. குஜ்ரால் குறிப்பிட்டதாக கருணாநிதி பத்திரிகையாளருக்குத் தெரிவித்தார்.

பிரதமர் வி. பி. சிங் அரசாங்கத்திற்குள் ஏற்பட்ட நெருக்கடி தொடர்பாக தமிழ் நாட்டு முதலமைச்சர் கருணாநிதி டில்லி சென்றிருந்த போது வெளியுறவு அமைச்சரைச் சந்தித்து இலங்கை விவகாரம் தொடர்பாகப் பேசிய


(4 ஆம் பக்கம் பார்க்க)

# நெடுந்தீவுப் படகு மீது கடற்படைதுப்பாக்கிப்பிரயோகம்

திங்கட்கிழமை மாலை பிரயாணிகளுடன் நெடுந்தீவு துறைமுகத்துள்வந்து சேர்ந்த படகை நோக்கிக் கடற்படை படகிலிருந்து சரமாரியாகத் துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. இதனால் பிரயாணிகளைக் கரையிறக்க முயற்சித்த படகோட்டி அதிர்ச்சியுற்று நிலை தளர்ந்ததால் படகு பாலத்துடன் மோதி நின்றது. பிரயாணிகள் தம்மைக் காப்பாற்றிக் கொள்ளக் கடலில் குதித்தும், பாலத்தில் புரண்டும் காயங்களுக்குள்ளாகினர். படகில் வரும் உறவினரை வரவேற்கப் பாலத்திற் காத்திருந்தோரும் சிதறி ஓடினர் படகில் பாலர்களும் பெண்களும் ஆண்களுமாக ஐம்பது பிரயாணிகள் இருந்தனர். ஆனால் இத்துப்பாக்

(4 ஆம் பக்கம் பார்க்க)





அல்லைப்பிட்டி, மண்டைதீவுக் கடற்கரைகளில் நேற்று முன்தினம் கரை ஒதுங்கிய அடையாளம் காண முடியாத நிலையிலுள்ள நான்கு சடலங்களைப் படங்களில் காணலாம். தமிழ் நாட்டுக்கு அகதிகளாகச் சென்றவர்களின் படகுகள் சிறிலங்கா கடற்படையினால் தாக்கப்பட்டதன் விளைவாக இதுவரை இருபது சடலங்கள் கரை ஒதுங்கியிருக்கின்றன.

# நில நடுக்கத்தினால் மணிலாவில் 30 கல்லூரி மாணவர்கள் பலி!

(மணிலா)

பிலிப்பைன்சில் நேற்று இடம்பெற்ற திடீர் நில நடுக்கம் ஒன்றினால் 43பேர் கொல்லப்பட்டுள்ளார்கள். கொல்லப்பட்டவர்களில் முப்பதுபேர் கல்லூரி மாணவர்களாவார். மேற்படி கல்லூரி இடிந்து விழுந்ததைத் தொடர்ந்தே இம் மாணவர்கள் கொல்லப்பட்டார்கள். ஒரு சினிமா திரையரங்கும் இடிந்து விழுந்துள்ளது. தலைநகர் மணிலாவிலும், பிலிப்பைன்சின் வடபகுதியிலுமே இந்த நில நடுக்கம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புலிகளின் கெரில்லாத் தாக்குதலை இராணுவம் முறியடிக்க இயலாது

## - கிழக்கு மாகாண இராணுவத் தளபதி

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் நவீன ஆயுதங்களைப் பயன்படுத்தி வருவதுடன்; புதிய யுத்தத் தந்திரங்களையும் கையாண்டு வருவதாக ஸ்ரீலங்காவின் மத்திய இராணுவத் தளபதியும், கிழக்கு மாகாணத்துக்கான இராணுவப்பொறுப்பாளருமான திரு. டி.எஸ்.டி சில்வா கூறியுள்ளார்.

கொழும்பிலிருந்து வெளிவரும் வாரஇதழ் ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டியிலேயே திரு. சில்வா இவ்வாறு கூறியுள்ளார்.

தொடர்ந்து அந்த வார இதழுக்கு பேட்டியளித்த திரு. சில்வா தமிழீழ விடுதலைப் புலிகள் நிலக்கண்ணிவெடி முறையை பரவலாக

(4ஆம் பக்கம் பார்க்க)

# உணவுப் பொருள்களுடன் தபால்பொதிகளும் பரிமாறல்

## 13க்குப் பதிலாக இம்முறை 25 லொறிகள் பயணம்

(யாழ்ப்பாணம்)

தென்னிலங்கையிலிருந்து பொருள்கள் ஏற்றிவருவதில் இந்தத் தடவை சிறிது முன்னேற்றம் காணப்படுவதாக யாழ். செயலக வட்டாரங்களும் செஞ்சிலுவைச் சங்கத்தினரும் தெரிவித்துள்ளனர்.

யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் இரண்டாவது தடவையாக இன்று செவ்வாய்க்கிழமை 25 லொறிகள் யாழ் மாவட்டத்துக்கு உணவுப் பொருள்களை ஏற்றிவருவதற்காக காலை இங்கிருந்து மதவாச்சிக்குப் புறப்படுகின்றன.

கடந்த புதன்கிழமை முதற் தடவையாக பத்து லொறிகளேசென்றுபொருள்களைஏற்றிவந்தமைகுறிப்பிடத்தக்கது.

இந்தத் தடவை யாழ். மாவட்டத்தில் கொழும்புக்

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஓமந்தையில் ஹெலி தாக்குதல்

(வவுனியா)

வவுனியா ஓமந்தையில் நடந்த ஹெலித் தாக்குதலில் பொதுமக்களில் ஒருவர் காயமடைந்தார்.

இச்சம்பவம் கடந்த 16 ஆம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வீர மரணம்

யாழ். கோட்டைக்குள் இருக்கும் இராணுவத்தினர்நேற்று மாலை மேற்கொண்ட துப்பாக்கி பிரயோகத்தில் லெப்டினட் ஜிம்பிறவுண் (சின்னவன்) வைமன் வீதி, நல்லூர் வீர மரணமடைந்தார்.

இவருக்குவிடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவிக்கின்றனர்.

# மாலை நாலரைக்கு நகரில் குண்டு வீச்சு!

## நாளாந்த நிகழ்ச்சியாகிறது

(யாழ்ப்பாணம்)

அவ்ரோ விமானங்கள் நேற்றும் கோட்டைப்பகுதிக்குள் உணவுப் பொதிகளையும் நகரின் மத்திய பகுதிகளில் குண்டு வீச்சுத் தாக்குதலையும் மேற்கொண்டன.

சுமார்நாலரை மணியளவில் மூன்று அவ்ரோ விமானங்களும் ஒரு ஹெலிகொப்ரர் விமானமும் அகோரத் தாக்குதலை மாறிமாறி மேற்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# திருமலையில் படையினர் பலி ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன

(திருக்கோணமலை)

திருக்கோணமலை, திரியாய் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இடம்பெற்ற மோதலொன்றில் ஐந்து இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன், நான்கு பேர் பலத்த

(4ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். நகரில் குண்டு வீச்சினால்

# நூற்றாண்டு காலமாகப் பாதுகாத்த பத்திரங்கள், படங்களுக்கும் ஆபத்து!

(யாழ்ப்பாணம்)

நீண்ட காலமாக பாதுகாத்து வந்த தமிழ் மக்களின் நில அளவை பற்றிய மிகப் பழைய பத்திரங்கள் சிறிலங்கா விமானத் தாக்குதலின் காரணமாக அழிந்து போகும் நிலையில் உள்ளன.

1818ஆம் ஆண்டிலிருந்து மிகப் பக்குவமாக இலங்கை இராணுவத்திடமிருந்தும் பொலிசாரிடமிருந்தும், இந்திய இராணுவத்திடமிருந்தும்

இறுதியாக தேசவிரோத சக்திகளில் இருந்தும் பாதுகாத்து வந்த தமிழ் மக்களின் பிரதேசங்களை உறுதிப்படுத்தும் தஸ்தா வேஜுக்கள், பிரதேச வரைபடங்கள் எனபன கடந்த சனிக்கிழமை நடைபெற்ற விமானத்தாக்குதலால் யாழ்ப்பாண பழைய செயலக கட்டிடத்தில் அமைந்திருந்த நில அளவைத் திணைக்கள கட்டிடம் சேதமுற்றதால் மிக ஆபத்தான நிலையில் தேங்கிக் கிடப்பதாக நில அளவைத் திணைக்கள யாழ். மாவட்ட அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் இப்பத்திரங்கள் பற்றிக் கூறும்பொழுது கிளிநொச்சி, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு ஆகியமாவட்டங்களில் தமிழ் மக்களின் பாரம்பரியபூமிபற்றிய அளவீடுகளின் உறுதிப்படுத்தப்பட்டஆவணங்கள் இந்த கட்டிடத்திலேயே வைக்கப்பட்டிருந்தன. இப்போது விமானத் தாக்குதலில் சேதமுற்றுள்ளதால் இனி ஒரு மழை வருமிடத்து இவை அழிந்துபோவது நிச்சயம் என யாழ். மாவட்ட நில அளவைத் திணைக்கள அத்தியட்சகர் வி. விஜயரட்ணம் தெரிவித்தார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

வரிவிளம்பரம்

விற்பனைக்கு

கோவில்களுக்கு தேவையான பூசைமணி, அசையாமணி, திருவாசி, குத்துவிளக்கு, ஸ்தூபி, வேல், சூலம் கும்ப செம்பு அடுக்குத்தீபம், பஞ்சாலாத்தி, பட்டுக்குடை அனைத்துப் பொருட்களும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். ஸம்ஸ்:- 297, K.K.S றோட், தற்போது:- 76/2 நாவலர், றோட், சோனக) தெரு, யாழ்ப்பாணம். (R-517)


# க. பொ. த. உயர்தரப் பரீட்சையை பிற்போட தமிழர் ஆ.சங். கோரிக்கை

ஆகஸ்டில் நடைபெறவிருக்கும் க. பொ. த. உயர்தரப் பரீட்சையை, நாடளாவிய ரீதியில் ஒத்திவைக்க நடவடிக்கை எடுக்குமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கல்வி அமைச்சர் லலித் அத்துலத் முதலியையும், பரீட்சை ஆணையாளர் திரு. ஆர்தர் வெதமுல்லையிடமும் வற்புறுத்தியுள்ளது. தெற்கில் கடந்த டிசெம்பர் மாதம் நடைபெறவிருந்த க. பொ. த. சாதாரண தரப் பரீட்சை தெற்கு இலங்கையில் ஏற்பட்ட வன்செயல் காரணமாக நாடளாவியரீதியில் ஒத்திவைக்கப்பட்டதுபோல, நடைபெறவிருக்கும் உயர்தரப் பரீட்சையையும் ஒத்திவைக்குமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வற்புறுத்தி அவசர செய்திஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

இது தொடர்பாக இச் சங்கத்தின் பொதுச்செயலாளரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள அவசர செய்தியில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது, பின்வரும் காரணங்களுக்காக சங்கம் பரீட்சையை ஒத்திவைக்குமாறு வற்புறுத்துவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒரு மாத காலத்திற்கு மேலாக அரசு வடக்குக்கிழக்குமாகாண மக்களுக்கு எதிராக யுத்தப் பிரகடனம் செய்து தொடர்ச்சியான யுத்தத்தில் ஈடுபட்டுள்ளபடியினால், பாடசாலைகள் இயங்கவில்லை, பாடசாலைகள் அகதிகள் முகாம்களாகியுள்ளன, பல பாடசாலைகள் விமானத் தாக்குதலால் மிகமோசமாகச் சேதப்படுத்தப்பட்டுள்ளன, பலமாணவர்கள், ஆசிரியர்கள் கொல்லப்பட்டுள்ளனர் அல்லது காயப்படுத்தப்பட்டுள்ளனர் அல்லது இராணுவமுகாம்களில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர், ஆசிரியர்கள் கற்பிக்கவோ அல்லது மாணவர்கள் கற்கவோ ஏற்ற உடல் உளநிலையில் இல்லை எனவே இந்தச் சூழ்நிலையில் ஆகஸ்டில் பரீட்சையை நடாத்துவது சாத்தியமற்றது.

மேலும் க. பொ. த. உயர்தர பரீட்சை ஏனைய பொதுப் பரீட்சைகள் போல் மாணவர்கள் தராதரத்தைக் கணித்து சித்தியெய்துவதற்காக நடாத்தப்படும் பரீட்சை அல்ல. இது பல்கலைக்கழகங்களின் புகுமுகப் போட்டிப் பரீட்சையும் கூட என்பதற்கு விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

பல்கலைக் கழகத்திற்கான புகுமுகப் பரீட்சை என்பதனால், வடக்குக்கிழக்கு மாணவர்களுக்கும் சம சந்தர்ப்பம் அளிப்பதற்கு இப்பரீட்சையை பிற்போடுதல் அவசியம். அடுத்து ஆகஸ்ட் மாதத்தில் யுத்த நிறுத்தம் அமுலில் வந்தாலும், இப்பரீட்சையை சம சந்தர்ப்பம் வழங்கும் பொருட்டு பிற்போடுதல் அவசியம் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

யுத்தநிறுத்தம் அரசினால் மேற்கொள்ளப்பட்டு, பாடசாலைகள் ஒழுங்காக நடைபெற ஆரம்பித்து மூன்று மாதம் கழிந்த பின்னரே இப் பரீட்சையை நாடளாவிய ரீதியில் நடாத்தலாம் என்ற கருத்தை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வலியுறுத்த விரும்புகிறது எனவும் சங்கத்தின் பொதுச் செயலாளர் சுட்டிக் காட்டியுள்ளார்.

## பதுங்குகுழிகள் அமைப்பதில் பல்கலைக்கழகமாணவர்கள்

(யாழ்ப்பாணம்)

தற்போதைய போர்க்கால சூழ்நிலையில் யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் சமூகப் பணி பிரதேச ரீதியாக விஸ்தரிக்கப்பட்டு வருகின்றது. தற்பொழுது வடமராட்சிப் பகுதி யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் பொது இடங்களில் பதுங்குகுழிகள் அமைக்கும் வேலைத்திட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். கடந்த சில வாரங்களாக வலிகாமப்பகுதி யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் பிரதேச ரீதியாக பொது மக்கள் அதிகம் கூடும் இடங்களில் பதுங்கு குழிகள் அமைத்து வருவது யாவரும் அறிந்ததே. நேற்றைய தினம் பல்கலைக்கழக மாணவர்களும் மாணவிகளும் இணைந்து நல்லூர் ஆலயத்திற்கு முன்பாக அமைந்துள்ள நாவலர் மண்டபத்தின் முன்னால் பெரியளவிலான பதுங்கு குழி ஒன்றை அமைத்தனர்.

## இருபதாம் திகதி ஹர்த்தாலை அ. தி. மு. க. எதிர்க்காது

(சென்னை)

இலங்கையில் அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்படுவது குறித்தும் அவர்களது சொத்துக்கள்அழிக்கப்படுவது குறித்தும் அதனைக் கண்டிக்கும் வகையில் ஆளும் தி.மு.க கட்சி ஏற்பாடு செய்துள்ள மாநிலம் தழுவிய பொது வேலை நிறுத்தம், ஹர்த்தால் ஆகியவற்றை அனைத்திந்திய அ.தி.மு.க எதிர்க்கமாட்டாது என்று அக்கட்சியின் பொதுச் செயலாளரான செல்வி ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

நேற்று சென்னையில் செய்தியாளர்கள் மத்தியில் இதனைத் தெரிவித்த செல்வி ஜெயலலிதா முதல்வர் கலைஞர் கருணாநிதி இந்தக் கண்டன ஹர்த்தால் குறித்த அறிக்கையை வெளியிடுவதற்கு முன்பாக அனைத்துக் கட்சிகளையும் அழைத்து அவைகளின் ஒத்துழைப்பையும் கோரியிருக்கலாம் என்றும் அவர் நிருபர்கள் மத்தியில் தெரிவித்துள்ளார்.


## அரசாங்க அறிவித்தல்

### கிளிநொச்சி மாவட்ட மலேரியா தடுப்பு இயக்கம்

மேற்படி மாவட்டத்தில் மலேரியா தடுப்பு இயக்கத்தில் கடமையாற்றும் சமயா சமய ஊழியர்ளும், பருவகால ஊழியர்களும் பளை அரசினர் ஆஸ்பத்திரியில் 1990ஆம் ஆண்டு யூலை மாதம் 18ஆம் 19ஆம்,


சனசமூக நிலையங்கள்

## காலத்தின் தேவையை உணர்ந்து செயல்பட வேண்டும்

- டிவகலாலா

(யாழ்ப்பாணம்)

தமிழர் பிரதேசத்தில் இன்றைய காலகட்டத்தில் நிலவும் யுத்த நிலைமையை கவனத்தில் கொண்டு மக்களின் தேவைகளைப் புரிந்து, அதற்கொப்ப செயல்பட அனைத்து சனசமூக நிலையங்களும் முன்வரவேண்டும். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு டிவகலாலா அனைத்து சனசமூக நிலையங்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் நல்லூர் பிரதேச சனசமூக நிலையங்களின் அங்கத்தவர்களை உள்ளடக்கிய கலந்துரையாடல் ஒன்று கொக்குவில் பிரதேச சபை மண்டபத்தில் இடம் பெற்றது. இக்கலந்துரையா

...மைகளும், அதன் தேவைகளும் வித்தியாசமானவை என்பதை விளங்கிக் கொள்ள வேண்டுமென்றும்; சன சமூக நிலையங்கள் விழாக்கள் நடத்துவதிலும், கேளிக்கைகள் நடத்துவதிலும் ஈடுபடாது காலத்தை உணர்ந்து பாதிக்கப்பட்டு யாழ். நோக்கிவரும் மக்களின் மனப்புண்ணை மாற்றி அவர்களுக்கான மாற்று வாழ்வை ஏற்படுத்த முன்வர வேண்டும் என்றும் கூறினார்.

அரசாங்க உத்தியோகத்தர்கள் வெறும் அதிகாரிகளாக செயல்படாது பாதிக்கப்பட்ட மக்களுக்கு சேவை செய்யும் தொண்டர்களாக மாறவேண்

தமிழர் புனர்வாழ்வுக்கழகம்

## சேவை செய்வோரை சந்திக்க வேண்டுகோள்

இடம்பெயர்ந்துஅகதிகளாக உள்ள எமது மக்களுக்காக மாணவர்கள், சனசமூக நிலையங்கள், பொதுஸ்தாபனங்கள் என்று பலரும் மிகவும் ஆர்வமாக உணவு, உடை, பணம் சேகரிப்பில் ஈடுபட்டுள்ளதை காண்கிறோம். பொதுமக்களும் மிகவும் ஆர்வமாக தமது பங்களிப்பை வழங்கிவருவதை காணக்கூடியதாக உள்ளது.

கடந்த காலங்களைப் போல் இல்லாமல் இம்முறை இடம் பெயர்ந்து அகதிகளாக உள்ள மக்களை பராமரிக்கும் பணிகள் ஒருமுகப் படுத்தப்பட்டே செயல் படுத்தப்பட்டு வருகின்றது. இதன்மூலம் எப்போது எங்கே உதவி தேவைப்படும் என்பதை அறிந்து செயல்பட முடியும். ஆகவே தற்போது எமது மக்களுக்கு (அகதிகள்) பொருட்களாகவோ, பணமாகவோ சேகரிப்பவர்கள் உடனடியாகஎம்முடன் தொடர்புகொண்டு எமது அனுமதியுடனும், ஆலோசனையுடனும் செயல்பட வேண்டுமெனவும் இச்செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் நாளை (18-07-1990) தம்மை கொக்குவிலில் அமைந்துள்ள தமது தலைமைக் காரியாலயத்தில் காலை ஒன்பது மணிக்கு வந்து சந்திக்குமாறும் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

## ஆங்கில வகுப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழகத்தில் புதிதாக அனுமதி பெற்ற மாணவர்களுக்கான ஆங்கில வகுப்புக்கள் 9-7-90 திங்கட்கிழமை முதல் மீண்டும் ஆரம்பமாகியுள்ளன. யாழ்.இந்துக் கல்லூரியில் முன்பு நடைபெற்ற இவ் வகுப்புக்கள் யாழ் வளாகத்திலுள்ள செல்வநாயகம் கட்டடத் தொகுதியில் நடைபெற்று வருகின்றது என பொறுப்பு உத்தியோகத்தர் திரு. என். தேவபாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

## வைத்திய வசதி இல்லாமையால் கிளிநொச்சியில் பலர் மரணம்

(கிளிநொச்சி)

முரசுமோட்டை, உருத்திரபுரம் ஆகிய இடங்களிலுள்ள அரசாங்க வைத்தியசாலைகளில் போதிய வைத்திய வசதிகள் இல்லாமையினாலும் அம்புலன்ஸ் வண்டிக்குப் போதிய எரிபொருள் இல்லாமையினாலும் பல உயிர்கள் அநியாயமாகச் செத்து மடிகின்றன.

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை சேதமாக்கப்பட்டதைத் தொடர்ந்தே பல உயிர்கள் அநியாயமாக இறந்துள்ளது.

மேற்படி மாவட்ட வைத்தியசாலை முரசுமோட்டை மிசன் வைத்தியசாலைக்கும் உருத்திரபுரம் அரசினர் வைத்தியசாலைக்கும் மாற்றப்பட்டது.

மாவட்ட வைத்தியசாலையிலிருந்து மருந்து வகைகளும் மற்றும் சில பொருட்களும் வெளியே எடுக்கப்பட்டு அவை முரசுமோட்டை மிசன் வைத்தியசாலைக்கும், உருத்திரபுரம் வைத்தியசாலைக்கும் கொண்டு செல்லப்பட்டன.

மாவட்ட வைத்திய அதிகாரி உட்பட உதவி டாக்டர்கள் மூவர் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் கடமையாற்றிய காலத்தில் கூட டாக்டர்கள் பற்றாக்குறை, தாதிமார் பற்றாக்குறை, சிற்றூழியர் பற்றாக்குறை ஆகியன பெருமளவில் இருந்தன.

பிற மாவட்டங்களிலிருந்து பெரும் தொகையான அகதிகள் இம்மாவட்டத்திற்கு வந்திருக்கும் இவ் வேளையில் வழமையை விடக் கூடுதலான டாக்டர்கள் இம்மாவட்டத்திற்குத் தேவைப்படும் இவ் வேளையில் இருந்த 4டாக்டர்களில் இருவர் மட்டுமே கடமையாற்றிவருகின்றனர். தாதிமார்களும் மிகக்குறைவாகவே உள்ளனர்.

இதுதவிர முரசுமோட்டை வைத்தியசாலையில் உள்நோயாளர்களைத் தங்க வைக்க கட்டில்கள் இல்லை. மகப்பேற்றுச் சிகிச்சை அளிக்க போதிய உபகரணங்கள் இல்லை. நஞ்சு அருந்தியவர்களைக் காப்பாற்றவும்போதிய உபகரணங்கள் இல்லை. விசர் நாய் கடிக்கு தடுப்பூசி இல்லை. இதனாலும் பலர் இறந்து வருவது குறிப்பிடத்தக்கது.

## திருட்டு ஆசாமிகளுக்கு தண்டனை

(விசேட நிருபர்)

## திறந்த பல்கலைக் கழகம்

(யாழ்ப்பாணம்)

சகல மட்ட பாடநெறி மாணவர்களையும் நாளை புதன்கிழமை அன்று காலை 10 மணிக்கு திறந்த பல்கலைக் கழக யாழ் பிரதேச நிலையத்திற்கு சமூகம் தரும்படி அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இறுதியாண்டுத் தேர்வினை வடகிழக்கு நிலைமை சாதகமாக அமையும் வரை பிற்போட நடவடிக்கை எடுப்பதற்கு கலந்து ஆலோசனை செய்யவே இவ் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ம)

## விஷமிகள் தொல்லை

கொழும்புத்துறைப் பகுதியில் தற்சமயம் விஷமிகளின் தொல்லை அதிகரித்துள்ளது. சில தினங்களுக்கு முன்பு கொழும்புத்துறையில் மேற்குப் பிள்ளையார் கோயில் உண்டியல் உடைக்கப்பட்டுப் பணம் திருடப்பட்டுள்ளது. சயிக்கிள் களவும் அதிகரித்துள்ளது. இரவில் இடம் பெயர்ந்த வீடுகளில் கள்ளக் கோழி பிடிப்பதிலும் ஒரு கோஷ்டி ஈடுபட்டுள்ளது. (43)

## உற்பத்திப் பண்டங்க விலையில் வீழ்ச்சி

(ஈச்சமோட்டை)

தற்போதைய நிலை காரணமாக போக்குவரத்துத் துண்டிக்கப் பட்டுள்ளதால் யாழ்ப்பாணக் கிராமங்களில் உற்பத்தி செய்யப்படும் வெங்காயம், பீற்றூட், வாழைப் பழம் ஆகியன சந்தைகளில் மலிவு விலையில் விற்பனையாகின்றன. இறாலும் கொழும்புக்கு ஏற்றுமதி செய்ய முடியாதிருப்பதால் சந்தையில் முன்பிலும் பார்க்கக் குறைந்த விலையில் பெறக் கூடியதாகவுள்ளது. கடந்த மாதத்துடன் ஒப்பிடும்போது இப்பண்டங்களின் விலை சுமார் 50 வீதம் குறைந்துள்ளது. (43)

## பதுங்கு குழிகள்

(தீவுப்பகுதி)

விமானத் தாக்குதல்களிலும், ஹெலித்தாக்குதல்களிலும் இருந்து தீவக மக்கள் தம்மைப் பாதுகாத்துக்கொள்ளும் பொருட்டு பதுங்கு குழிகளை அமைத்து வருகிறார்கள். இப்பதுங்கு குழிகள் கூட்டாகவும் தனிப்பட்ட முறையிலும் அமைக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (15)

வவுனியா மாவட்டத்தில்

## நகரப்பாடசாலைகள் சேதம்

அ.தி.மு.க எதிர்க்கமாட்டாது என்று அக்கட்சியின் பொதுச் செயலாளரான செல்வி ஜெயலலிதா தெரிவித்... அவர்களின் ஒத்துழைப்பையும் கோரியிருக்கலாம் என்றும் அவர் நிருபர்கள் மத்தியில் தெரிவித்துள்ளார்.


## அரசாங்க அறிவித்தல்

### கிளிநொச்சி மாவட்ட மலேரியா தடுப்பு இயக்கம்

மேற்படி மாவட்டத்தில் மலேரியா தடுப்பு இயக்கத்தில் கடமையாற்றும் சமயா சமய ஊழியர்ளும், பருவகால ஊழியர்களும் பளை அரசினர் ஆஸ்பத்திரியில் 1990ஆம் ஆண்டு யூலை மாதம் 18ஆம் 19ஆம், திகதிகளில் தவறாது சமுகம் அளிக்கும் படி பணிக்கப் படுகின்றனர்.

ந. கனகசபை,
பிராந்திய சுகாதார சேவைகள்,
16-07-90 பணிப்பாளர், யாழ்ப்பாணம்.

(B/1268)



## ராஜாமான்சிங்கிற்கு,

நீ காணாமல்போன நாளிலிருந்து உனது பெரியம்மா சாப்பாடில்லாமல் படுத்தபடுக்கையாக உள்ளா. நீ எங்கிருந்தாலும் உடனடியாக வந்து விட்டுப் போகவும்.

—சந்திரத்தான்

(R. 523)



## வைற் ஹவுஸ்

### அந்திய கால சேவை

### 119, பிரதான வீதி, யாழ்ப்பாணம்

எமது ஸ்தாபனம் எந்நேரமும் திறந்திருக்கும் இங்கு வரமுடியாத பட்சத்தில் கீழே குறிப்பிட்ட விலாசத்தில் உடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி

வைற் ஹவுஸ்
(அந்திய கால சேவை)
ஆடியபாதம் வீதி,
சந்தைக்கு அருகாமையில்
கொக்குவில் மேற்கு, கொக்குவில்

(B/1255)


(யாழ்ப்பாணம்)

தமிழர் பிரதேசத்தில் இன்றைய காலகட்டத்தில் நிலவும் யுத்த நிலைமையை கவனத்தில் கொண்டு மக்களின் தேவைகளைப் புரிந்து, அதற்கொப்ப செயல்பட அனைத்து சனசமூக நிலையங்களும் முன்வரவேண்டும். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு டிவகலாலா அனைத்து சனசமூக நிலையங்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் நல்லூர் பிரதேச சனசமூக நிலையங்களின் அங்கத்தவர்களை உள்ளடக்கிய கலந்துரையாடல் ஒன்று கொக்குவில் பிரதேச சபை மண்டபத்தில் இடம் பெற்றது. இக்கலந்துரையாடலிலேயே திரு டிவகலாலா இந்த அழைப்பினை விடுத்தார்.

தொடர்ந்து அங்கு உரையாற்றிய அவர் சன சமூக நிலையங்கள் மாத்திரமன்றி அனைத்து மக்களும் சாதாரண காலத்தின் நிலைமைகளை விட, யுத்தக்கால நிலைமைகளும், அதன் தேவைகளும் வித்தியாசமானவை என்பதை விளங்கிக் கொள்ள வேண்டுமென்றும்; சன சமூக நிலையங்கள் விழாக்கள் நடத்துவதிலும், கேளிக்கைகள் நடத்துவதிலும் ஈடுபடாது காலத்தை உணர்ந்து பாதிக்கப்பட்டு யாழ். நோக்கிவரும் மக்களின் மனப்புண்ணை மாற்றி அவர்களுக்கான மாற்று வாழ்வை ஏற்படுத்த முன்வர வேண்டும் என்றும் கூறினார்.

அரசாங்க உத்தியோகத்தர்கள் வெறும் அதிகாரிகளாக செயல்படாது பாதிக்கப்பட்ட மக்களுக்கு சேவை செய்யும் தொண்டர்களாக மாறவேண்டும் என்றும் அவர் அங்கு கேட்டுக் கொண்டார்.

மேற்படிக் கலந்துரையாடலில் தற்பொழுது வடக்கு நோக்கி வந்திருக்கும் வேறு மாவட்ட அகதிகள் பற்றிய பிரச்சினைகள் உணவு உற்பத்தி ஆகியவைகள் குறித்தும் ஆராயப்பட்டது.


## இடமாற்றம் பற்றிய அறிவித்தல்

### வி. மு. பேரம்பலம் அன் கோ.

தத்துவக் கணக்கறிஞர்கள்

நாட்டின் இன்றைய நிலைமை காரணமாக, பாதுகாப்பு நிலைமைகளைக் கருதி இலக்கம் 100, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணத்தில் இயங்கிவந்த எமது அலுவலகம்

15/1, மணியம்ஸ் பில்டிங், சிறாம்பியடி ஒழுங்கை, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

என்ற முகவரிக்கு மாற்றப்பட்டுள்ளதை எமது வாடிக்கையாளருக்கு அறியத்தருகிறோம்.

நிலைமை சீராகும்வரை விடுமுறை தினங்கள் தவிர்ந்த ஏனைய நாட்களில் தினமும் காலை 9 மணி முதல் 1 மணி வரை மேற்படி அலுவலகம் செயல்படும் என்பதையும் அறியத் தருகிறோம்.

முகாமையாளர்,
வி. மு. பேரம்பலம் அன் கோ.
தத்துவக் கணக்கறிஞர்கள்

(B. 1267)



## இடம் மாற்றம்

### ஸ்ரீகுமார் ரெக்ஸ்ரைல்ஸ்

54A, நவீன சந்தை, யாழ்ப்பாணம்

தற்போதுள்ள சூழ்நிலை காரணமாக எமது ஸ்தாபனம் கீழ்வரும் முகவரிக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

### முத்திரைச் சந்தி

பஸ்நிலையத்திற்கு அருகாமை
யாழ்ப்பாணம். (R/522)


மேற்படி மாவட்ட வைத்தியசாலை முரசுமோட்டை மிசன் வைத்தியசாலைக்கும் உருத்திரபுரம் அரசினர் வைத்தியசாலைக்கும் மாற்றப்பட்டது.

மாவட்ட வைத்தியசாலையிலிருந்து மருந்து வகைகளும் மற்றும் சில பொருட்களும் வெளியே எடுக்கப்பட்டு அவை முரசுமோட்டை மிசன் வைத்தியசாலைக்கும், உருத்திரபுரம் வைத்தியசாலைக்கும் கொண்டு செல்லப்பட்டன.

மாவட்ட வைத்திய அதிகாரி உட்பட உதவி டாக்டர்மையாற்றிவருகின்றனர். தாதிமார்களும் மிகக்குறைவாகவே உள்ளனர்.

இதுதவிர முரசுமோட்டை வைத்தியசாலையில் உள்நோயாளர்களைத் தங்க வைக்க கட்டில்கள் இல்லை. மகப்பேற்றுச் சிகிச்சை அளிக்க போதிய உபகரணங்கள் இல்லை. நஞ்சு அருந்தியவர்களைக் காப்பாற்றவும்போதிய உபகரணங்கள் இல்லை. விசர் நாய் கடிக்கு தடுப்பூசி இல்லை. இதனாலும் பலர் இறந்து வருவது குறிப்பிடத்தக்கது.

...சுமார் 50 வீதம் குறைந்துள்ளது. (43)

## திருட்டு ஆசாமிகளுக்கு தண்டனை

(விசேட நிருபர்)

குடாநாட்டிலும், கிழக்கு மாகாணத்திலும் நடைபெற்றுக்கொண்டிருக்கும் யுத்த நிலைமையில் பொது மக்கள் இடம் பெயர்ந்து சென்றுள்ள இடங்களில் திருட்டில் ஈடுபட்டவர்கள் கையும் மெய்யுமாக பிடிக்கப்பட்டு அவ்வப்போது தண்டனை வழங்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு யாழ்ப்பாணப் பகுதிகளில் களவுத் தொழிலில் ஈடுபட்ட இருபதுக்கும் மேற்பட்டவர்கள் யாழ். கோட்டை யுத்த முனையில் பணி செய்ய அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக தெரிய வருகிறது. (21)

## பதுங்கு குழிகள்

(தீவுப்பகுதி)

விமானத் தாக்குதல்களிலும், ஹெலித்தாக்குதல்களிலும் இருந்து தீவக மக்கள் தம்மைப் பாதுகாத்துக்கொள்ளும் பொருட்டு பதுங்கு குழிகளை அமைத்து வருகிறார்கள். இப்பதுங்கு குழிகள் கூட்டாகவும் தனிப்பட்ட முறையிலும் அமைக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (15)

### வவுனியா மாவட்டத்தில்

## நகரப்பாடசாலைகள் சேதம் கிராமப்பாடசாலைகளில் முகாம்

(வவுனியா)

ஸ்ரீலங்கா இராணுவத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சண்டை தொடங்கியதில் இருந்து வவுனியா மாவட்டத்தில் ஒருமாத காலமாக பாடசாலைகள் எதுவும் நடைபெறவில்லை. நகரில் உள்ள பாடசாலைகள் பலஇராணுவ ஷெல் வீச்சால் சேதமடைந்துள்ளன.

கிராமப்புறப் பாடசாலைகள் யாவற்றிலும் நகரையும் நகரைச் சூழவுள்ள பகுதிகளிலும் இருந்து வெளியேறிய மக்கள் அகதிகளாக தஞ்சம் புகுந்துள்ளமையால் பாடசாலைகள் நடைபெறவில்லை.


## Vickna Tuition Centre

52, Stanley Road
Jaffna.

16 - 07 - 1990 அன்று விக்னா கல்விநிலைய மண்டபத்தில் இடம்பெயர்ந்த அகதிகள் சம்பந்தமான கலந்துரையாடலில் பின்வரும் முடிவுகள் எடுக்கப் பட்டன.

(1) எமது கல்வி நிறுவனத்தில் கல்விபயிலும் ஒவ்வொரு மாணவரும் தங்களால் இயன்ற உணவுப் பண்டங்களை (அரிசி, தேங்காய்) ஒப்படைத்தல்.

(2) ஒவ்வொரு மாணவரும் தங்களால் இயன்ற உடுபுடைவைகளை சேகரித்து ஒப்படைத்தல்.

(3) பொது இடங்களில் பதுங்கு குழி அமைத்தல்.

(4) மாணவர்கள் தங்கள் ஊரிலுள்ள அகதிகளின் விபரங்களை திரட்டி சமர்ப்பித்தல்.

(5) க. பொ.த. (உ) பரீட்சையை ஒத்திவைக்குமாறு மகஜர் ஒன்றை கல்வித் திணைக்களத்தினூடாக கல்வி அமைச்சுக்கு சமர்ப்பித்தல்.

மு. குறிப்பு:- (I) எமது மாணவர்களில் தொண்டர் அடையாளஅட்டை எடுக்காத மாணவர்கள் காலை 9 மணி முதல் 12 மணிவரை காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளவும்.

(II) அகதிகளுக்காக திரட்டப்பட்ட உணவுவகைகளையும் காரியாலயத்தில் (9 — 12 மணி) ஒப் படைக்கவும்

(B/1269) அதிபர்


## தீவுப்பகுதி மின் விநியோகம் துண்டிப்பு

(தீவுப்பகுதி)

கடந்த ஒரு மாத காலமாக தடைப்பட்டிருந்த தீவுப் பகுதிக்கான மின்சார வினியோகம் பலத்த முயற்சியின் பின்னர் கடந்த செவ்வாய்க் கிழமை அரை குறைவலுவுடன் மீண்டும் தீவுப் பகுதி மக்களுக்கு கிடைத்தது. மின்சாரம் கிடைத்து மறுநாளே அது மீண்டும் மாயமாய் மறைந்து விட்டது. தற்போது தீவுப் பகுதி மீண்டும் இருளில் மூழ்கியுள்ளது. (15)

## அகதிகளுக்கு மருந்து தேவை

(தீவுப்பகுதி)

தீவுப்பகுதியில் உள்ள அகதி மக்களை தீவுப்பகுதி சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவித் தொண்டர்களும், இலங்கை செஞ்சிலுவைச் சங்க முதலுதவித் தொண்டர்களும் முகாம்களைப் பார்வையிட்டும், முதலுதவிகளை, சிகிச்சைகளைமேற்கொண்டும் வருகிறார்கள்.

இப்பகுதிகளில் அகதிகள் மேலும், மேலும் அதிகரித்த வண்ணம் உள்ளனர். இவர்களுக்கு விநியோகிக்க போதிய மருந்து வகைகள் குறைவாக இருப்பதால் பொதுநலம் விரும்பிகள் மருந்துகள் தந்து உதவும் வண்ணம் வேண்டப்பட்டுள்ளனர். (15

## சிந்தனைக்கு

அச்சத்தை அடக்குவதே மனிதனின் முதல் கடமை.

- தாமஸ் கார்லைல்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 17-07-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண் 05

# அகதிகள் மீதும் காட்டுமிராண்டித்தனமா?

தமிழ் மக்கள் தமிழ் நாட்டுக்கு மட்டுமல்ல எந்த நாட்டுக்குமே அகதிகளாகப்போவதை நாம் விரும்பவில்லை.

தமிழ் மக்கள் தமது சொந்த மண்ணில் சுதந்திரமாகவும் கௌரவமாகவும் பாதுகாப்பாகவும் சுயநிர்ணய உரிமையுடன் வாழ்வதற்காகவே போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

எல்லோருமே ஆயுதம் ஏந்திப் போராட முடியாது. ஆயுதம் ஏந்தக்கூடியவர்கள் ஆயுதம் ஏந்திப் போராட வேண்டியது இன்று அவசியமாகிவிட்டது.

இன அழிப்பில் சிறிலங்கா சிங்கள பௌத்த பேரினவாதம் முழுமூச்சாக ஈடுபட்டுக்கொண்டிருக்கும்போது இனத்தைப் பாதுகாப்பதற்கு இன்று தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போராடுவதைத் தவிர வேறு வழியில்லை.

அகிம்சைப் போராட்டங்கள் எல்லாம் இங்கு சிங்கள பௌத்த பேரினவாதத்துக்கு முன் செல்லுபடியாகாது என்பது கடந்தகால அனுபவம். இந்த நிலையில்தான் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தினார்கள்.

ஆயுதம் ஏந்திப் போராடும் இளைஞர்களுக்கு ஆயுதம் ஏந்த முடியாதவர்கள் தம்மால் இயன்ற உதவிகளை அளிக்க வேண்டும்; அளிக்க முடியும்.

இந்த நிலையிலும் தமிழ் மக்கள் பலர் அகதிகளாகத் தமிழ் நாட்டுக்கு வெளியேறுகிறார்கள் என்றால் உண்மையில் கடந்தகால அனுபவங்களால் அவர்கள் பெரும் பீதியடைந்திருக்க வேண்டும் என்றுதான் கருத வேண்டும்.

1958ஆம் ஆண்டில் தென்னிலங்கையில் இனக்கலவரம் தூண்டிவிடப்பட்டபோது பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு இராணுவம் கடற்படை, விமானப்படை வேறுபாடு எதுவுமின்றி பாதுகாப்பளித்து உதவக்கூடியதாக இருந்தன.

அந்தச்சமயத்திலும்கூடத் தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பளிக்க முடியாதென்ற நிலையில் அகதிகளாகி விட்ட தமிழ் மக்களைப் பாதுகாப்பாக கப்பல்களில் ஏற்றி தமிழ் மக்களின் தாயகமான வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு அனுப்பி வைத்தார்கள்.

1977ஆம் ஆண்டிலும் 1983ஆம் ஆண்டிலும் தமிழ் மக்களுக்கு ஆயுதப்படைகளின் பாதுகாப்பு இல்லாத போதிலும் அகதிகளாக்கப்பட்ட தமிழ் மக்கள் தங்கள் தாயகத்துக்கு கப்பல்களில்ஏற்றி அனுப்பிவைக்கப்பட்டனர்.

தமிழ் மக்களுக்குத் தங்கள் தாயகத்திலும் ஆயுதப் படையினரால் பாதுகாப்பில்லை என்பதை உணர்ந்து பலர் 1983ஆம் ஆண்டில் முதல் தடவையாகத் தமிழ் நாட்டுக்கு அகதிகளாகச் சென்றனர். இவர்களில் இன்னும் பலர் நாட்டுக்கு திரும்பவே இல்லை.

# போர்க்காலச் சிந்தனைகள்

## ஆயுதப்போராட்டம் ஏன்? —— 3

சிங்கள பேரினவாதம் குறுக்கிட்டு விட்டது.

அதில் ஆச்சரியப்படுவதற்கொன்றுமில்லை.

பிரேமதாசா புலிகள்கேட்ட சிலவற்றையும் கொடுக்க முன் வந்ததை கண்ட சிங்கள இனவாதம் அவரை சிக்கெனப் பிடித்துக் கொண்டது.

அந்த வாத நோயிலிருந்து பிரேமதாசாவினால் தப்ப முடியவில்லை. அவர் நோய் வாய்ப் பட்டு விட்டார்.

வடக்கு கிழக்கு பொலிஸ் நிலையங்களில் தமிழ்ப் பொலிஸாரை நியமிக்க தயங்கினார்.

வாக்களித்தபடி தேவையற்ற இராணுவ முகாம்களை அகற்ற சாட்டுப் போக்குச் சொன்னார்.

இராணுவ முகாம்களுக்கு மேலதிக துருப்புக்களை ''சாதாரண மாற்றம்'' என்ற பேரில் கொண்டு போய் குவித்தார்.

மாகாண சபையை கலைப்பதில் தாமதம் காட்டினார்.

புலிப்படையின் எதிரிகளான ஈ. பி. ஆர். எல். எவ் உடன் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டார்.

இவற்றுக்கெல்லாம் மேலாக புலிகளிடமே ''உங்களிடம் மாகாண அரசு நிருவாகத்தை கையளிப்பதற்கு பௌத்த சங்கமும் சிங்கள மக்களும் விரும்பவில்லை'' என தன் நிலைப்பாட்டை வெளிப்படுத்தினார்,

புலிகளுக்கு கொடுத்த வாக்குறுதிகளுக்கு மாறாக பிரேமதாசா நடந்து கொண்டமை அவர் அரசில் சூதாட்டம் ஆடுகிறார் என்பதையே எடுத்துக் காட்டுவதாக இருந்தது.

முன்னுக்குப் பின் முரணாக நடந்து கொள்ளுவதும் சொன்ன சொல்லைக் காப்பாற்ற முடியாமையும் சிங்கள அரசியல் தலைவர்களின் தலையாய பண்பு என்பது உலகுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் தெரியும்; படித்த தமிழ் முட்டாள்களுக்குத் தெரியாது.

இந்தத் தெரியாததனமே இவர்களை ''வாழும்வழி'' பற்றிப் பேச வைக்கிறது.

இவர்கள் அபாயமானவர்கள்; சுயநலமிகள், இவர்கள் சுதந்திரத்தை விடச் சுகத்தைப் பெரிதென கொள்பவர்கள்

இவர்கள் வருங்காலச் சந்ததியினரும் தம்மைப் போன்று அடிமைகளாக வாழவேண்டும் என விரும்புபவர்கள். இவர்கள் கண்ணினுமினிய சுதந்திரம் போன பின்பும் வாழும் வழி தேடும் பதர்கள்.

இவர்களைப் பற்றி நாம் சட்டை செய்வதற்கில்லை நாம் இன்று எமது வரலாற்றில் மிகச் சிறந்த கால கட்டமொன்றில் இருக்கிறோம்.

எமது வருங்காலச் சந்ததியினர் '' அது அவர்களுடைய மிகச் சிறந்த காலம்'' (Finest Hour) என்று சொல்லுமளவுக்கு நாம் இன்று எமது வரலாற்றுக் கடமையை செய்தே தீர வேண்டும்

''விவாதித்துக்கொண்டிருக்காதே செயலில் இறங்கு'' என்பதே தமது நிலை பேற்றுக்கு திண்டாடிக் கொண்டிருந்த ஆங்கில மக்களுக்கு வின்ஸ்ரன் சேர்ச்சில் விடுத்த கட்டளையாகும்.

இக் கட்டளை இன்று எமக்கும் பொருந்தும் சாதி சமய, வர்க்க, கட்சி, இயக்க வேறுபாடுகளை மறந்து தமிழன் என்ற ரீதியில் ஒருமித்து செயற் படுவோம்.

இப் போர் தவிர்த்திருக்க முடியாதது; தவிர்த்திருக்கக் கூடாதது; கட்டாயமானது; புனிதமானது என்பதை உணர்ந்து செயற்படுவோம்.

எமது சரித்திரப் பின்னணியின்படி ஆயுதங்களைத் தான் தூக்கியேயாக வேண்டியிருந்தது - இது தலைவர் பிரபாகரனின் கூற்று.

அவர் குறிப்பிட்ட சரித்திரப் பின்னணி கி. பி. 4 ஆம் நூற்றாண்டில் மகா நாம தேரர் மகா வம்சத்தில் விதைத்த ''தமிழின எதிர்ப்பு'' என்னும் விதை முளைத்து பரிணமித்து இன்றுவரை வியாபித்திருக்கும் நீண்டகாலப் பகுதியை கொண்டது.

''ஆயுதங்களைத்தான்'' என்றது ஏனைய வழிமுறைகள் திறம்படச் செயற்படாமையையே குறிப்பாக உணர்த்தி நிற்கிறது.

இந்த உண்மையைப் புலப்படுத்துவதற்கு இந்நூற்றாண்டின் அரசியல் வரலாறே போதுமானது.

### இரத்தினம்

1919; சட்டசபை பிரதிநிதித்துவம் சம்பந்தமாக சேர் ஜேம்ஸ் பீரிசுக்கும் சேர். பொன் அருணாசலம் அவர்களுக்குமிடையே ஏற்பட்ட ஒப்பந்தம் எவ்வித மதிப்பும் கொடுக்கப்படாமல் சிங்களத் தலைவர்களினால் கிழித் தெறியப்பட்டது.

1925: திரு. ஈ. சி. கொரியாவுக்கும் சேர் வைத்திலிங்கம் துரைசாமிக்குமிடையில் ஏற்பட்ட ''மகேந்திரா ஒப்பந்தம்'' கண்டியில் கூடிய சிங்கள மகாசபை அதை ஏற்காததால் கிழித்தெறியப்பட்டது.

1936: முழுச்சிங்கள அமைச்சரவை நிறுவப்பட்டு ஆளுவோர் சிங்களவர் ஆளப்படுவோர் தமிழர் என்பது நிரூபிக்கப்பட்டது.

1937: இந்திய வம்சாவழித் தமிழர்கள் ஊராட்சி மன்றத் தேர்தல்களில் போட்டியிடுவதை தடுக்கும் சட்டம் இயற்றப்பட்டது.

1948: இந்திய பாகிஸ்தானிய பிரசா உரிமைச் சட்டத்தினால் இந்தியத் தமிழர்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டது.

1948-50: தமிழ்ப் பிரதேசங்களில் திட்டமிட்ட குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு தமிழர்களின் தொகுதி வாரியான பெரும்பான்மைப் பலம் குறைக்கப்பட்டது.

1956: ''சிங்களம் மட்டும்'' சட்டத்தினால் தமிழர்கள் இரண்டாந்தரப் பிரசைகள் ஆக்கப்பட்டனர்.

1957: பிரதேச சபைகளை அமைப்பதற்கு திரு. எஸ். டபிள்யூ ஆர். டி. பண்டாரநாயக்காவும் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகமும் செய்து கொண்ட பண்டா – செல்வா ஒப்பந்தம்'' ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் கண்டிப் பாதை யாத்திரையினால் ஏற்பட்ட எதிர்ப்பைத் தொடர்ந்து கிழித்தெறியப்பட்டது.

1972: இலங்கை இறைமையும் தன்னாதிக்கமும் கொண்ட குடியரசாக்கப்பட்டு சோல்பரி யாப்பின் மூலம் தமிழ் மக்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த சட்ட ரீதியான அரசியல் பாதுகாப்பு நீக்கப்பட்டது.

இவை அனைத்தும் தமிழ் மக்களை நசுக்கி ஒடுக்குவதற்கு எடுக்கப்பட்ட ஜன நாயக செயற்பாடுகளாகும்.

ஜன நாயகத்தின் பேரில் நடைபெற்ற அநீதிகளை எமது தலைவர்கள் கண்ணாரக் கண்டார்கள்.

அவர்களிடையே நிலவிய ஒற்றுமையின்மையும், சுயநலனும், அகங்காரமும், பேடித்தன்மையும் அவர்களை செயல் வீரர்களாக்காது தடுத்து விட்டன.

அவர்கள் எல்லாரும் ''தந்திர ஜாலம் செய்து அதிகார பீடத்தைக் கைப்பற்றும் வேஷதாரிகளின் விளைநிலமாகிய பாராளுமன்றத்தில்'' சொற்போர் செய்து தமிழர்களின் உரிமைகளைப் பெற்றுவிடலாம் என தவறாகக் கருதி விட்டார்கள்.

அவர்கள் சாத்வீகப் போராட்டம் நடத்தினார்கள்; சத்தியாக்கிரகம் செய்தார்கள்; வழிமறிப்பு செய்தார்கள். ஆனால் பாராளுமன்றப் பதவியை மட்டும் துறந்தார்கள் இல்லை.

இந்தக் காலகட்டத்தில் தான் அவர்களுக்கு ''சிங்களவன் இங்கிலிஸ்காரன் அல்ல'' என்ற மாபெரும் உண்மை தெரிய வந்தது.

அவர்கள் அந்த உண்மையைத் தெரிந்து கொண்ட போது தண்ணீர் தலைக்கு மேல் போய் விட்டது.

இந்தச் சூழ்நிலையில் தான் தமிழ் இளைஞர்களிடையே பாரதி கூறியது போன்று ''ஓர் புதிய ஆதர்ஸம், ஓர் கிளர்ச்சி, ஓர் தர்மம், ஓர் மார்க்கம்'' தோன்றிற்று.

சிங்கள அரசினால் அறிமுகப்படுத்தப்பட்ட தரப்படுத்தலும், கட்டவிழ்த்து விடப்பட்ட பொலிஸ் அடக்குமுறையுமே தமிழ் இளைஞர்களை சிந்திக்கச் செய்தன.

பாராளுமன்ற ஜனநாயக முறை போலியானது என்பதை அவர்கள் உணர்ந்து கொண்டனர்.

தமிழ்த் தலைவர்களின் கையாலாகாத்தனமே தமிழ் மக்களின் இழிவுக்குக் காரணம் என்பதை அவர்கள் தெரிந்து கொண்டனர்.

வரலாற்று இயக்க சக்தி எது என்பதை அவர்கள் கண்டு கொண்டனர்.

உலகப் புரட்சிகள் பற்றியும் சுதந்திரப் போராட்டங்கள் பற்றியும் அறிந்து கொண்ட அவர்கள் பல சமூகங்கள் எவ்வாறு நிறுவன ரீதியாக, ஆயுதப் போராட்டம் மூலமாக, முன்னேறின என்பதை விளங்கிக் கொண்டனர்.

அதன் விளைவே இன்று நடக்கும் போராகும்.

(தொடரும்)

பாகிஸ்தான் ஹைதராபாத்தில்

# தொடர்ச்சியாக பல குண்டு வெடிப்புகள்

# 50பேர் பலி; 100பேருக்கு மேல் காயம்

(கராச்சி)

பாகிஸ்தானில் தென்கிழக்கு ... 100 பேர் வரை காயமுற்றுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து இடம் பெற்ற அசம்பாவிதங்களை பொலிசார் சந்தேகிக்கின்றனர். ஆனால் அதற்

## பதுங்கு குழி அமைக்கும் பணியில் பெண்கள்

(ஈச்சமோட்டை)

பாஷையூர்ச் சந்தைக்கு அருகாமையில் அங்கு பொருட்களை வாங்கக் கூடும், பொது மக்கள், வியாபாரிகள் பாதுகாப்புக் கருதி மிகப்பெரியளவிலான பதுங்குகுழி ஒன்றை வெட்டும் வேலையில் பாஷையூர் வாழ்பெண்கள் தற்போது ஈடுபட்டுள்ளனர். (43)

## அக்கடமி சேதம்

1958ஆம் ஆண்டில் தென்னிலங்கையில் இனக்கலவரம் தூண்டிவிடப்பட்டபோது பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு இராணுவம் கடற்படை, விமானப்படை வேறுபாடு எதுவுமின்றி பாதுகாப்பளித்து உதவக்கூடியதாக இருந்தன.

அந்தச்சமயத்திலும்கூடத் தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பளிக்க முடியாதென்ற நிலையில் அகதிகளாகி விட்ட தமிழ் மக்களைப் பாதுகாப்பாக கப்பல்களில் ஏற்றி தமிழ் மக்களின் தாயகமான வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு அனுப்பி வைத்தார்கள்.

1977ஆம் ஆண்டிலும் 1983ஆம் ஆண்டிலும் தமிழ் மக்களுக்கு ஆயுதப்படைகளின் பாதுகாப்பு இல்லாத போதிலும் அகதிகளாக்கப்பட்ட தமிழ் மக்கள் தங்கள் தாயகத்துக்கு கப்பல்களில்ஏற்றி அனுப்பிவைக்கப்பட்டனர்.

தமிழ் மக்களுக்குத் தங்கள் தாயகத்திலும் ஆயுதப் படையினரால் பாதுகாப்பில்லை என்பதை உணர்ந்து பலர் 1983ஆம் ஆண்டில் முதல் தடவையாகத் தமிழ் நாட்டுக்கு அகதிகளாகச் சென்றனர். இவர்களில் இன்னும் பலர் நாட்டுக்கு திரும்பவே இல்லை!

1958, 1977, 1983 ஆம் ஆண்டுகளில் தமிழ் அகதிகளைப் பாதுகாப்பாகத் தமது தாயகத்துக்கு அனுப்பிவைத்ததற்கு மாறாக தமிழ் மக்கள் சிலர் தமது உயிரைப்பாதுகாத்துக் கொள்வதற்காக அகதிகளாகத் தமிழ் நாட்டுக்குத் தப்பிச் செல்வதற்கும் சிறிலங்கா சிங்கள பௌத்த பேரினவாத அரசு தடையாக இருப்பது மட்டுமல்ல அகதிகளையே நடுக்கடலில் வைத்துக் கொலை செய்யுமளவுக்கு காட்டு மிராண்டித்தனமாக நடந்து கொண்டிருக்கிறது; நடந்து கொள்கிறது.

தமிழ் மக்களைச் சொந்த மண்ணிலேயே அழித்தொழிக்கும் இனப்படுகொலையிலீடுபட்டுள்ள சிறிலங்கா சிங்கள பௌத்த பேரினவாதம் கடலிலும் தரையிலும் மட்டுமல்ல வானத்திலிருந்தும் தமிழ் மக்களைப் பூண்டோடு அழிப்பதற்குக் கங்கணம் கட்டியிருப்பதைத் தெளிவாகக்காட்டி வருகிறது.

அல்பேனியாவில் இனியும் வாழ முடியாது என்று வெளிநாட்டுத் தூதரகத்தில் தஞ்சமடைந்த அல்பேனியர்கள் இத்தாலிக்குத் தப்பிவந்த போதும் அங்கிருந்து மேற்கு ஜேர்மனிக்கும் பிரான்சுக்கும் அகதிகளாகக் கப்பல்களில் அனுப்பப்படும்போதும் இந்தநாடுகள் மனிதாபிமானத்துடன் அந்த அகதிகளை வரவேற்று உபசரித்து தாம் நாகரிகம் உள்ள மக்கள் தான் என்பதை உலகுக்கு நிரூபித்துள்ளன.

ஆனால் சிறிலங்காவிலோ ''பேசுவது பௌத்ததர்மம் இடிப்பது விகாரை'' என்பது போல சிங்கள பௌத்த பேரினவாதத்திலிருந்து தப்பி உயிரைப்பாதுகாத்துக் கொள்ள அகதிகளாகச் செல்லும் தமிழ் மக்களைக் கடலில்வைத்துக்கொலைசெய்து தாம்காட்டுமிராண்டிகளை விடக் கேடு கெட்ட அநாகரிகமானவர்கள் என்பதை நிரூபித்துள்ளனர்.

## முல்லைத்தீவில் தொடர் தாக்குதல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நகரப்பகுதியில் கடந்த சில நாட்களாக அடிக்கடி இடம்பெற்று வரும் ஹெலிகொப்டர் குண்டு வீச்சு துப்பாக்கிச் சூடு, ஷெல்தாக்குதல் நடவடிக்கைகளைத் தொடர்ந்து நகரப்பகுதி மக்கள் பெருமளவில் தமது வீடுகளை விட்டு வெளியேறி அயல் கிராமங்களில் தங்கியுள்ளனர்.

இத்தாக்குதலின் போது பொது மக்கள் சிலர் பலத்த காயங்களுக்குள்ளாகியும், கொல்லப்பட்டுமுள்ளதோடு சில வீடுகளும் கடைகளும் சேதமடைந்துள்ளன.

## வருடாந்த உற்சவம்

(கொழும்புத்துறை)

சாவகச்சேரி அருள் மிகு துக்காதேவி தேவஸ்தான வருடாந்த உற்சவம் 12 ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும், 21ஆம் திகதி சனிக்கிழமை ஆடி அமாவாசை தினத்தன்று தீர்த்தத்திருவிழாவும், 24ஆம் திகதி செவ்வாய்க் கிழமை வைரவர் பொங்கலும், 25ஆம் திகதிபுதன்கிழமை ஆடிப்பூரத் திருவிழாவும் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (24)

லப்புலிகளுக்கும் தெரியும்; யின்படி ஆயுதங்களைத் தான் 1937: இந்திய வம்சாவழித் பாராளுமன்றத்தில்'' சொற் (தொடரும்)

பாகிஸ்தான் ஹைதராபாத்தில்

# தொடர்ச்சியாக பல குண்டு வெடிப்புகள்

# 50பேர் பலி; 100பேருக்கு மேல் காயம்

(கராச்சி)

பாகிஸ்தானில் தென்கிழக்கு நகரமான ஹைதராபாத்தில் இடம் பெற்ற தொடர்ச்சியான பல குண்டு வெடிப்பு சம்பவங்களில் குறைந்தது 50 பேர் வரை இறந்துள்ளனர். 100 பேர் வரை காயமுற்றுள்ளனர்.

நேற்று முன்தினம் லாகூருக்கு சென்று கொண்டிருந்த கராச்சி எக்ஸ்பிறஸ் ரயிலில் குண்டு வெடித்ததில் 15 பேர் உயிர் இழந்தனர்.

இதனைத் தொடர்ந்து இடம் பெற்ற அசம்பாவிதங்களின் போதே ஏனைய உயிர் இழப்புக்கள் ஏற்பட்டன.

ரயில் வெடிப்பைத் தொடர்ந்து ஏற்பட்ட பதட்ட நிலையைக் கவனிக்க பொலிசார் ஹைதராபாத்தில் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த இரு மாதங்களாக சிந்து மாகாணத்தில் சிந்தி இன மக்களுக்கும், மொகாஜிர் சமூகத்தவர்களுக்கும் இடையேமோதல்கள்நடந்தன

இவ் மோதல்களில் குறைந்தது 300 பேர் இறந்துள்ளனர்.

இக் கலகங்கள் தணிந்து செல்லும் நேரத்தில் மீண்டும் சிந்து மாகாணத்தில் கலவரம் உயிர் இழப்புக்கள் ஏற்பட்டுள்ளது.

இச் சம்பவத்திற்கு பாகிஸ்தானில் இருந்து சுதந்திரம் கோரும் சிந்தி தேசிய வாதிகளை பொலிசார் சந்தேகிக்கின்றனர். ஆனால் அதற்கான ஆதராம் எதுவும் கிடைக்கவில்லை. அத்துடன் எந்த ஒரு இயக்கமும் இச் சம்பவத்திற்கு உரிமையும் கோரவில்லை.

## வெளிவிவகார அமைச்சர் உட்பட 13 அமைச்சர்கள் ராஜினாமா

(டில்லி)

இந்தியாவின் வெளியுறவு அமைச்சர் ஐ. கே. குஜ்ரால் தனது பதவியை ராஜினாமாச் செய்துள்ளார்.

ஆரம்பத்தில் ஜனதாதள கட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் பிரச்சினையை ஒட்டி மூன்று மத்திய அமைச்சர்கள் பதவி விலகினார்கள்.

இதனைத் தொடர்ந்து பிரதமர் வி. பி சிங்கும் தான் பதவி விலகப்போவதாக அறிவித்தார். ஆனால் தேசிய முன்னணியின் வேண்டுகோளின் பிரகாரம் இது நிறுத்தப்பட்டது.

ஆனால் இதன் பின்னர் ஐ. கே. குஜ்ராலும் ஏனைய 4 மத்திய அமைச்சர்களும் நேற்று முன்தினம் ராஜினாமாச் செய்துள்ளனர். இது வரை ராஜினாமாச் செய்துள்ள அமைச்சர்களின் எண்ணிக்கை 13 ஆக உயர்ந்துள்ளது.

## இந்திய அரசுமீது குற்றச்சாட்டு

(லண்டன்)

இந்தியாவில் பீகார் மாநிலத்தில் ஹரியான மக்கள் பொலிஸாரால் துன்புறுத்தப் பட்டுள்ளதாகவும், பல ஹரியான பெண்கள் பொலிஸாரால் மானபங்கப்படுத்தப் பட்டதாகவும் சர்வதேச மன்னிப்புச்சபை குற்றம் சாட்டியுள்ளது.

நூற்றுக் கணக்கான சீக்கியர்கள் மீது படையினர் துன்புறுத்தல் மேற்கொண்டதாகவும் குற்றம் சாட்டப் பட்டுள்ளது.

## பதுங்கு குழி அமைக்கும் பணியில் பெண்கள்

(ஈச்சமோட்டை)

பாஷையூர்ச் சந்தைக்கு அருகாமையில் அங்கு பொருட்களை வாங்கக் கூடும், பொது மக்கள், வியாபாரிகள் பாதுகாப்புக் கருதி மிகப்பெரியளவிலான பதுங்குகுழி ஒன்றை வெட்டும் வேலையில் பாஷையூர் வாழ்பெண்கள் தற்போது ஈடுபட்டுள்ளனர். (43)

## அக்கடமி சேதம்

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் மாலை யாழ்நகரில் இடம் பெற்ற விமானக் குண்டு வீச்சினால் சாயி மெடிக்கல் அக்கடமி முற்றாக சேதமடைந்து விட்டது.

இந்த நிலையம் பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வெற்றி வேண்டி விசேட பிரார்த்தனை

(தீவுப்பகுதி)

தமிழ் மக்களுக்கு சுபீட்சம் வேண்டியும், தற்போது நடக்கும் யுத்தத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் பெரு வெற்றி பெறவும் வேண்டி தீவுப் பகுதிகளில் உள்ள பிரதான ஆலயங்கள் தோறும், யாகங்களும், விஷேட சங்காபிஷேகங்களும், பூசை பிரார்த்தனைகளும் இடம் பெற்று வருகின்றன. நயினாதீவு நாக பூஷணி அம்பாள் ஆலயம். வேலணை பெருங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம் புளியங்கூடல் ஸ்ரீ. மகாமாரி அம்மன் ஆலயம், இலந்தைவனம் ஸ்ரீ சித்திவினாயகர் ஆலயம், வேலணை ஸ்ரீ முருகன் ஆலயம், என்பவற்றிலும் இப்பூசைகள் நடைபெற்று வருகின்றன (15)

## முச்சக்கர வண்டி அன்பளிப்பு

(சாவகச்சேரி)

இரு கால்களும் ஊனமுற்று நடக்க முடியாத இருவருக்கு, சாவகச்சேரி லயன்ஸ் கழகம் இரு முச்சக்கர சைக்கிள்களை அன்பளிப்புச் செய்துள்ளது.

சாவகச்சேரியைச் சேர்ந்த திரு. கார்த்திகேசு என்பவரும் செல்வன் ஜனார்த்தனன் என்ற கல்லூரி மாணவன் ஒருவருமே இந்த அன்பளிப்பு முச்சக்கர சைக்கிள்களைப் பெற்றுக் கொண்டவர்களாகும்.

சாவகச்சேரி லயன்ஸ் கழகம் முச்சக்கர சைக்கிள் அன்பளிப்புடன். பொதுமக்களுக்கான இரத்த அமுக்கப் பரிசோதனையும் செய்து மருந்து கொடுத்தனர். லயன்ஸ்தலைவர் திரு. வி. பி தியாகராஜா தலைமையில் லயன்ஸ் டாக்டர் எஸ் கருணானந்தம், டாக்டர் பேதுறு பிலிப்ஸ், டாக்டர்தா.சிவபாதம்உட்பட பலர் கலந்து கொண்டு இரத்த அமுத்தப் பரிசோதனை செய்தனர் (35)

## சிரமதானம்

(கொழும்புத்துறை)

யாழ். நகரில் பதுங்கு குழி அமைக்கும் வேலைகள் மிகத் துரிதமாக நடைபெற்று வருகிறது.

யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவர்கள் துரித முயற்சியால் பொதுமக்கள் பாவனைக்காகச் சுண்டுக்குழிச் சந்தியில் பெரிய அளவிலான பதுங்கு குழியைச் சிரமதானப் பணி மூலம் கடந்த வியாழக்கிழமை செய்துள்ளனர். இவர்களது சேவை பாராட்டுக்குரியது. (24)

## தட்டுப்பாடு

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்டத்தில் அத்தியாவசிய பொருட்களுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. உணவுப் பொருள் தட்டுப்பாட்டினால் அனேக வியாபார நிலையங்கள் மூடப்பட்டு வருகின்றன.

குறிப்பாகதீப்பெட்டி, கோழித்தீன், தவிடு, சீனி, மா, குழந்தைகளின் பால் மா போன்ற பல அத்தியாவசியப் பொருட்களுகே கூடுதலான தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. (24)

## போட்டிமுடிவுகள்

சுன்னாகம் மயிலணி சைவ மகாவித்தியாலயம் அதன் பவளவிழாவை முன்னிட்டு சிறப்பாக நடாத்தி வரும் தொடர்மதிப்பீட்டு அடிப்படையிலான ஈராண்டுத்திட்ட வீட்டுத் தோட்டப் போட்டி இன்று 2 ஆவது கட்டத்தை ஆரம்பித்துள்ளது. இன்றைய நெருக்கடியான நிலைமையிலும் இடைவிடாது போட்டி அமைப்புக்குழு வீட்டுத்தோட்டங்களை மேற்பார்வை செய்தும் அறிவுறுத்தல்கள் உதவிகள் அளித்தும் 5 ஆம் ஆண்டுக்கு மேற்பட்ட மாணவரிடையே ஊக்கமளித்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

கடந்தமாதம் முடிவுற்ற முதலாம் கட்டப் போட்டியில் பரிசு பெறுவோர் பின்வருமாறு:

மத்திய பிரிவு:- 1ஆம்பரிசு- ச. பிரதீபன், 2 ஆம் பரிசு தி. சதீஸ்குமார், 3 ஆம் பரிசு ச. ராஜீஸ்கண்ணா, சி. கௌரி

மேற்பிரிவு: 1 ஆம் பரிசு செ. செல்வகுமார், 2 ஆம் பரிசு மு. கிரிதரன், 3 ஆம் பரிசு பி. ஜெயவதனன்.

## காசோலையாக கொடுப்பனவு

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆசிரியர்களுக்கும், பல்வேறு அரச திணைக்கள ஊழியர்களுக்கும் கடந்த யூன் மாதக் கொடுப்பனவிற்குப் பதிலாக ஆயிரம் ரூபா முற்பணமாகத் தற்பொழுது காசோலையாக வழங்கப்பட்டு வருகின்றது. (24)

## பேராதனைக்கு மாணவர் புறப்பாடு

வடபகுதியிலிருந்து பேராதனைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மாணவர்கள் நேற்று முன்தினம் மாலை பஸ்ஸில் பேராதனைப் பல்கலைக் கழகத்திற்குச் செல்ல புறப்பட்டுள்ளனர். இவர்கள் வவுனியா வரை சென்று, அங்கிருந்து மதகுரு ஒருவரின் உதவியுடன் பேராதனை செல்ல உள்ளார்கள். இன்று விடுமுறையின் பின் பேராதனைப் பல்கலைக் கழகம் ஆரம்பமாகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## மட்டுப்படுத்தப்பட்ட சேவை நடத்தக் கோரிக்கை

(தீவுப்பகுதி)

தற்போது பண்ணை வீதியூடாக யாழ்ப்பாணம் செல்ல முடியாத காரணத்தினால் வடபிராந்திய போக்குவரத்துச்சபைக்கு சொந்தமான இரண்டு பேருந்துக்கள் கடந்த மூன்று வாரங்களுக்குமேலாக வேலணையில் நிறுத்தப்பட்டுள்ளது. இந்த இரு பஸ்வண்டிகளையும் தீவக மக்களின் நன்மை கருதி ஊர்காவற்றுறை, புங்குடுதீவு, அராலித்துறை ஆகிய இடங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்ட சேவையாற்ற விடும்படி இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றார்கள். (15)

Registered as News Paper at the G. P. O.

ஈழநாதம்

யாழ். பல்கலைக்கழக

# மருத்துவ பீடம் இயங்கமுடியாது;

# மருத்துவ பீட ஆசிரியர் மகஜர்

(யாழ்ப்பாணம்)

போக்குவரத்துதடைகாரணமாக பல்கலைக்கழக மாணவர்களும், ஆசிரியர்களும் பிரயாணம் செய்துகொள்ள முடியாத நிலையில்உள்ளனர். இன்னும் சிலர் வீடுவாசல்களை விட்டுப் புலம்பெயர்ந்துள்ளனர். ஆகவே திருநெல்வேலியில் அமைந்துள்ள யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடம் இயங்க முடியாத நிலையில் உள்ளது. எல்லா விரிவுரைகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இவ்வாறு யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட ஆசிரியர்கள் ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு அனுப்பியுள்ள மகஜர் ஒன்றில் தெரிவித்துள்ளனர்.

பன்னிரண்டு ஆசிரியர்கள் கையெழுத்திட்ட அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

யாழ். போதனா வைத்தியசாலை பாதுகாப்புக் காரணமாக வேறு இடத்துக்கு மாற்றப்பட்டுள்ளதால் மருத்துவ பீட மாணவர்களின் மருத்துவ மனைப் பயிற்சியும் இடைநிறுத்தப்பட்டுள்ளது. ஆயிரம் கட்டில்கள் வசதியைக் கொண்ட போதனா வைத்தியசாலை ஒன்றுதான் ஷெல்தாக்குதல், மற்றும் குண்டுவீச்சுக் காயங்களுக்கும், கடும் சுகவீனங்களுக்கும் வைத்தியம் செய்யக்கூடியவைத்தியசாலை யாகும். போதனாவைத்தியசாலையில் இருந்த இந்த வசதிகள் தற்சமயம் 44 கட்டில்களைக் கொண்ட மானிப்பாய் கிறீன் மெமோறியல் வைத்தியசாலையில் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

வடக்கிலும், கிழக்கிலும் பலாக்காரம் நீடிப்பதால் வகைதொகை இல்லாது மக்கள் உயிரிழப்பதோடு, தமது ஆதனங்களை இழந்து, வீடுவாசல்களை விட்டுப் புலம்பெயர்ந்து அகதிகளாகியுள்ளனர். எரிபொருள் தட்டுப்பாடு நிலவுவதோடு, போக்குவரத்துத்தடையும் ஏற்பட்டுள்ளது. இதன் விளைவாக உணவு, மருத்துவ வசதிகளும் பாரிய அளவில் பற்றாக்குறையாகவுள்ளன. போஷாக்கின்மையால் தொற்று நோய்கள் ஏற்படக்கூடிய அபாயமும் உள்ளது,

பல்கலைக்கழக மருத்துவ பீட ஆசிரியர் கழகம் ஷெல் அடி, குண்டு வீச்சு, மற்றும் சகலவிதமான பலாத்காரங்களையும் கண்டிப்பதாக அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாடசாலைகள், பரீட்சைகள் நடாத்துவது சாத்தியமற்றது

தற்போதைய சூழ்நிலையில் பாடசாலைகளைத் தொடர்ந்துநடாத்து வதும், பரீட்சை நடத்துவதும்சாத்தியமாகாது

நேற்றுக் கல்வித் திணைக்களத்தில் நடைபெற்ற பாடசாலைகள்நடாத்துதல், பரீட்சைகள் நடாத்துதல் பற்றிய ஓர் கலந்துரையாடலிலேயே பெரும்பாலானோர் இக்கருத்தைத் தெரிவித்தனர். மாணவர்கள் வருகையின்மை,மாணவர்கள் அகதிகளாக்கப்பட்டு அகதி முகாம்களில் உள்ளமை போக்குவரத்தின்மை போன்ற பிரச்சினைகள் இக்கருத்திற்கு ... செயற்குழு ஒன்று நியமிக்கப்பட்டது. இச்செயற்குழுதனது அறிக்கையையும், தகவல்களையும் ஓரிரு தினங்களில் சமர்ப்பிக்கும்.தீர்மானங்களடங்கிய மகஜர் ஒன்றை இக்குழு கல்விப்பணிப்பாளரைச் சந்தித்து அவரூடாக அரசாங்கத்திற்கும், கல்வி அமைச்சிற்கும், பரீட்சை ஆணையாளருக்கும் சமர்ப்பிக்கும்.

இக்கலந்துரையாடலில்கல்வித் திணைக்கள அதிகாரிகள், உதவிக் கல்விப் பணிப்பாளர், கொத்தணி அதிபர்கள், தனியார் பாடசாலை அதிபர்கள், ...

## முகாமையாளர் இல்லாததால் பண்டங்கள் தேக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்நகரில் பிரதான வீதியில் அமைந்துள்ள மார்க்பெட் நிறுவனத்தில் பெருமளவில் வெங்காயம், மிளகாய் ஆகிய உற்பத்திப் பண்டங்கள் கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன. கருவாட்டு முதலாளிகளின் விலைமதிப்பான கருவாட்டு வகைகளும் களஞ்சிய வசதிக்காக அங்கு வைக்கப்பட்டுள்ளன. ஆனால் முகாமையாளரும், களஞ்சியப் பொறுப்பதிகாரியும் கடமைக்குச் சமுகம்தராததால் மேற்படி பண்டங்கள் பிரயோசனமற்றுத் தேங்கிக் கிடக்கின்றனவாம்.

### புலிகளின்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொண்டுள்ளதுடன்; கெரில்லா தாக்குதல் நடவடிக்கைகளிலேயே முழுமையாக ஈடுபட்டுள்ளனர். இந்த கெரில்லா தாக்குதல்களை இராணுவ நடவடிக்கைகளினால் எளிதில் முறியடித்துவிட முடியாது என்று கூறிய அவர் தாங்கள் ஒரு பகுதியை தமது கட்டுப்பாட்டிலிருந்து விடும் பொழுது அதனை புலிகள் முழுமையாக தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விடுகின்றார்கள் என்றும் கூறினார்.

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்த வரையில் எவரும் புலிகளை காட்டிக் கொடுக்கவில்லை என்று கூறிய அவர்; புதிதாக இயங்கும் கொலைப் படைதம்மைக் கொன்றுவிடும் என்றும் தமிழ் மக்கள் அஞ்சுகிறார்கள் என்றும்; புலிகளின் தாக்குதல் நடவடிக்கைகளினால் காட்டுப் பிரதேசத்து எல்லைப் பகுதிகளை இராணுவத்தினரால் பாதுகாத்துக் கொள்ள முடியாதுள்ளது என்றும்தெரிவித்துள்ளார்.

## வடக்கில் இராணுவநடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாம்

(கொழும்பு) -ரஞ்சன்

வடபகுதிக்கான இராணுவ நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்தினா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் மன்னார், வவுனியா, கிளிநொச்சி உட்பட சகல பகுதிகளிலும் இந்த நடவடிக்கை உக்கிரப் படுத்தப் பட்டுள்ளதாக தெரிவித்தார்.

## க. பொ. த. உயர்தர பரீட்சை பின் போடப்பட மாட்டாது

(கொழும்பு) -லலித்

வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் பதற்ற நிலை நிலவிய போதும் க. பொ. த உயர் தரப் பரீட்சை பின்போடப் படமாட்டாது என உயர் கல்வி அமைச்சர் லலித் அத்துலத்முதலி அறிவித்துள்ளார்.

வடக்குக் கிழக்கு மாணவர்கள் நாட்டின் ஏனைய தொகுதிகளில் இருந்து பரீட்சை எழுதுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும் என்றும் கூறியுள்ளார்.

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். சுண்டிக்குளி மகளிர் கல்லூரி உயர் வகுப்பு மாணவர் அனைவரையும் இன்று காலை 10.00 மணிக்குக் கல்லூரியில் நடைபெற இருக்கும் கூட்டத்திற்குச் சமுகமளிக்கும் ...

## அகதிகளுக்கான உடைகள்

அரியாலை ஸ்ரார் சயன்ஸ் சென்ரர் கல்வி நிலைய மாணவர்களால் சேகரிக்கப்பட்ட உடைகள் தொகுதி, வசதி குறைந்த அகதிகள் தங்கியிருக்கும் முகாம் ஒன்றுக்கு ...

### நெடுந்தீவு

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கித்தாக்குதலிருந்து பிரயாணிகள் காயங்கள் எதுவுமின்றி தப்பிக் கொண்டனர்.

அதேவேளை நெடுந்தீவு குறிகட்டுவான் படகுச் சேவைக் கெனப் புதிதாக வருவிக்கப்பட்ட வலம்புரி மோட்டார்படகு நயினாதீவுக் கடற்படைத் துறைமுகத்தில் பிரயாணிகளுடன் தடுத்து வைக்கப்பட்டது. அதிற் பிரயாணம் செய்தவர்கள் பின்னர் வேறு படகில் பிரயாணம் செய்ய அனுமதிக்கப்பட்டனர், பிரயாணத்தை வேறுபடகில் மேற்கொள்ள ஒழுங்கு செய்தவர்கள் கடற்படையினர் எனவும் அவர்கள் ஒழுங்கு செய்த நயினாதீவு புங்குடுதீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கப் படகினையே நெடுந்தீவுத் துறைமுகத்துள் நுழைந்த போது கடற்படையினர் தாக்கினர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கோண்டாவில் செயலகத்தில் இரு கலந்துரையாடல்கள்

வடிசாலை நிர்வாக உறுப்பினர்கள் ஒன்றிணைப்புக்குழு நிர்வாகிகள், வடிசாலை முகாமையாளர்கள் ஆகியோரை உள்ளடக்கிய கலந்துரையாடல் ஒன்று நாளை புதன்கிழமை காலை பத்துமணியளவில் தமிழீழ விடுதலைப்புலிகள் கோண்டாவில் மாதிரி நிர்வாக செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இதேவேளை இதே இடத்தில் காலை பதினொருமணியளவில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், முகாமையாளர்கள், கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர்கள் ஆகியோரை உள்ளடக்கிய வேறொரு கலந்துரையாடலும் நடைபெறவுள்ளது.

இந்த இரண்டு கலந்துரையாடல்களிலும் தமிழீழ விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோ மகேந்திரராசா (மாத்தயா) கலந்துகொள்வார்.

இந்த கலந்துரையாடல்களில் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம், வடிசாலை ஆகியவற்றின் இன்றைய நிலை பற்றியும் எதிர்கால நடவடிக்கைகள் குறித்தும் வெவ்வேறாக விரிவாக ஆராயப்படவுள்ளது.

உணவுப் பொருள் கையிருப்பு பற்றிய விபரங்களைக் கொண்டுவருமாறு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கோரப்பட்டுள்ளதுடன் வரணி, திக்கம், சங்கானை உட்பட அனைத்துப் பகுதிகளில் உள்ளவர்களையும் தவறாது இந்த கலந்துரையாடல்களில் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### நூற்றாண்டு . . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இப் பத்திரங்களைப் பாதுகாப்பான ஓர் இடத்திற்கு மாற்றுவது அவசியம். ஆகவே சகல நில அளவைத் திணைக்கள உத்தியோகஸ்தர்களும் தமது யாழ். மாவட்ட காரியாலயத்திற்கு வந்து இந்த ஆவணங்களை பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றுவதற்கு வேண்டிய உதவிகளை செய்ய வேண்டும் எனவும் வேண்டினார்.

அத்துடன் இவற்றைப் பாதுகாத்து வைத்திருக்க ஒரு தகுந்த வீடும் தமக்கு தந்து உதவ வேண்டும் என பொது மக்களை அவர் வேண்டிக் கொண்டார்.

இதேபோல திருமலையில் தமிழ் மக்கள் பாரம்பரியமாக குடியிருந்ததற்கான ஆதாரங்களைக் கொண்ட காணி உறுதிகள் பாதுகாத்து வைக்கப்பட்டிருந்த காணிக் கந்தோர் தீக்கிரையாக்கப்பட்டு இப்பொழுது அக் காணிகளுக்கான உறுதிகள் சிங்களவர்களுக்குப் பதியப்பட்டுள்ளது இவ்விடத்தில் குறிப்பிடத் தக்கதாகும். (லோ)

### திருமலையில்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

காயம் அடைந்ததாக தெரிய வந்துள்ளது.

விடுதலைப்புலிகளால் இவர்களிடம் இருந்து ரீ 56-1 ரக துப்பாக்கி ஒன்று, ரீ 56-2 ரக துப்பாக்கி இரண்டு, ரவைகள் முந்நூற்றி அறுபதும், ரவைக் கூடுகள் பன்னிரெண்டும், ஜே. ஆர். கிரனெட் இரண்டும் கைப்பற்றப்பட்டதாகவும் தெரிகின்றது.

அதேவேளை மட்டக்களப்பு கல்லடி பகுதியில் இடம் பெற்ற இன்னுமொரு சம்பவத்தில் இரண்டு இராணுவத்தினர் பலத்த காயமடைந்ததாக சிறிலங்கா பாதுகாப்பு ...

### மாலை

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டவண்ணமிருந்தன. கோட்டை இராணுவத்தினர்களுக்கு இதேநேரம் பொதிகள் போடப்பட்டன.

### புதுவிமானம்

இந்தத் தாக்குதல் நடைபெறுவதற்கு முன்பு காலை யாழ். நகரப்பகுதிக்குள் புதிய ரக வெண்ணிற விமானம் ஒன்று நோட்டம் விட்டுச்சென்றது. இதனைத் தொடர்ந்து சில மணிநேரம் கழித்து அவ்ரோ விமானங்களும் ஹெலிக்கொப்ரரும் நகரை நோக்கி தாக்குதல் நடத்தின,

### இருமுறை தாக்குதல்

இந்தநான்கு விமானங்களும் நகரைநோக்கி முதலில் ஒரு முறை தாக்கிவிட்டுச் சென்று மீண்டும் இரண்டாம்முறை திரும்பி வந்தும் தாக்கின, இதேவேளை ஹெலிக்கொப்ரர் விமானம் அவ்ரோ விமானங்களுக்கு வழிகாட்டிய அதேவேளை ஹெலிக்கொப்ரரில் இருந்தும் பலத்த துப்பாக்கித் தாக்குதல் நடைபெற்றது.

### போராளி வீரமரணம்

இந்த ஹெலிக்கொப்ரர் அவ்ரோ விமானங்களின் தாக்குதல் நடைபெற்ற சமயம் கோட்டை இராணுவத்தின் முன் காவல் கடமையில் ஈடுபட்டிருந்தபோராளி ஒருவரை நோக்கி இராணுவம் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததனைத் தொடர்ந்துஏற்பட்ட ...

## நடாத்துவது சாத்தியமற்றது

தற்போதைய சூழ்நிலையில் பாடசாலைகளைத் தொடர்ந்துநடாத்து வதும், பரீட்சை நடத்துவதும்சாத்தியமாகாது நேற்றுக் கல்வித் திணைக்களத்தில் நடைபெற்ற பாடசாலைகள்நடாத்துதல், பரீட்சைகள் நடாத்துதல் பற்றிய ஓர் கலந்துரையாடலிலேயே பெரும்பாலானோர் இக்கருத்தைத் தெரிவித்தனர். மாணவர்கள் வருகையின்மை, மாணவர்கள் அகதிகளாக்கப்பட்டு அகதி முகாம்களில் உள்ளமை போக்குவரத்தின்மை போன்ற பிரச்சினைகள் இக்கருத்திற்கு காரணமாகத் தெரிவிக்கப் பட்டது.

இதனைத் தீர்மானிக்க செயற்குழு ஒன்று நியமிக்கப் பட்டது. இச்செயற்குழுதனது அறிக்கையையும், தகவல்களையும் ஓரிரு தினங்களில் சமர்ப்பிக்கும். தீர்மானங்களடங்கிய மகஜர் ஒன்றை இக்குழு கல்விப்பணிப்பாளரைச் சந்தித்து அவருடாக அரசாங்கத்திற்கும், கல்வி அமைச்சிற்கும், பரீட்சை ஆணையாளருக்கும் சமர்ப்பிக்கும்.

இக்கலந்துரையாடலில்கல்வித் திணைக்கள அதிகாரிகள், உதவிக் கல்விப் பணிப்பாளர், கொத்தணி அதிபர்கள், தனியார் பாடசாலை அதிபர்கள், தேசிய பாடசாலைஅதிபர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம)


# றேடியோஸ்பதி

**வாடிக்கையாளர்கள் கவனத்திற்கு**

ஒலிப்பதிவு திருத்த வேலைகளுக்காக எம்மிடம் பொருட்களை ஒப்படைத்த வாடிக்கையாளர்கள் கீழ்க்கண்ட முகவரியில் உடன் தொடர்பு கொள்ளவும்.

## றேடியோஸ்பதி
**766, பருத்தித்துறை வீதி,**
**நல்லூர்.**

(B 1245)



**வாடிக்கையாளர்களின் கவனத்திற்கு**

# நியூ லலிதா ஜுவல்லர்ஸ்
**74/1 கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

எமது ஸ்தாபனம் வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க தற்போது நிலவும் நாட்டின் நிலைமை காரணமாக தினசரி காலை 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 1.00 மணிவரை திறந்திருக்கும் என்பதை அறியத்தருகிறோம்.

இங்ஙனம்
## நியூ லலிதா ஸ்தாபனத்தார்

(B 1258)


## பின் போடப்பட மாட்டாது

(கொழும்பு)

வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் பதற்ற நிலை நிலவிய போதும் க. பொ. த உயர் தரப் பரீட்சை பின் போடப் படமாட்டாது என உயர் கல்வி அமைச்சர் லலித் அத்துலத்முதலி அறிவித்துள்ளார்.

வடக்குக் கிழக்கு மாணவர்கள் நாட்டின் ஏனைய தொகுதிகளில் இருந்து பரீட்சை எழுதுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும் என்றும் கூறியுள்ளார்.

-லலித்

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். சுண்டிக்குளி மகளிர் கல்லூரி உயர் வகுப்பு மாணவர் அனைவரையும் இன்று காலை 10.00 மணிக்குக் கல்லூரியில் நடைபெற இருக்கும் கூட்டத்திற்குச் சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

### உணவு

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடந்தமாதம் 29ஆம் திகதி இவர் அரசாங்க அதிபருடன் தொடர்புகொண்டு, பின் வவுனியா மாவட்ட மக்களுக்கான நிவாரணப் பொருட்களை மற்றும் கூட்டுறவுச் சங்கங்களுக்கான பொருட்களை ஏற்றிவர நகரப் பகுதிக்குச் சென்றபின்னர் இவரைக் காணவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இவர் மர்மமான முறையில் காணாமல் போனதையிட்டு, இவரின் மனைவி நா. ஞானமலர் வவுனியா இராணுவ இணைப்பதிகாரி ரட்னாயகவுடன் தொடர்பு கொண்டபோது குறிப்பிட்ட அதிகாரி செட்டிகுளம், பம்பைமடு பகுதிகளுக்கு உணவுப் பொருட்கள் கொண்டு சென்றார் என்று கூறப்பட்டதாம்.

மேற்படி இராணுவ இணைப்பதிகாரியுடன் காணாமல் போன அதிகாரியின் அண்ணர் எஸ். தியாகராசா தொடர்பு கொண்டபோது நெடுங்கேணி, முல்லைத்தீவு ஆகிய இடங்களுக்கு உணவுப் பொருட்கள் கொண்டு சென்றார் என்று கூறப்பட்டதாம். (தி)

### தமிழர்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொள்ள வேண்டும் என்றும் அந்த வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கம்யூனிஸ்ட் கட்சியின் அந்த வேண்டுகோளில் மேலும் சொல்லொண்ணாத் துயரங்களுக்கு உள்ளாகி இருக்கும் இலங்கைத் தமிழ் மக்களுக்கு ஆதரவாகவும், இலங்கை அரசின் இராணுவ நடவடிக்கைகளைக் கண்டித்தும் வரும் வெள்ளிக் கிழமை தமிழகத்தில் மேற்கொள்ளப்படவுள்ள மாநிலம் தழுவிய ஹர்த்தால், பொதுவேலை நிறுத்தம் ஆகியவற்றில் தொழிலாளர்கள் உட்பட அனைத்து மக்களும் கலந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளது.

## அகதிகளுக்கான உடைகள்

அரியாலை ஸ்ரார் சயன்ஸ் சென்ரர் கல்வி நிலைய மாணவர்களால் சேகரிக்கப்பட்ட உடைகள் தொகுதி, வசதி குறைந்த அகதிகள் தங்கியிருக்கும் முகாம் ஒன்றுக்கு வழங்கப்படவுள்ளது.

### ஓமந்தை

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

திகதியன்று ஓமந்தை விளக்கு வைத்த குளத்தில் நடந்தது. இதில் சின்னையா - இராசதுரை (47) என்ற பொதுமகனே காயமடைந்தவர். (ம)

### உணவுப் பொருள்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காக கட்டிவைக்கப்பட்ட தபால் பொதிகளும் இந்த லொறிகளில் கொண்டு செல்லப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேபோல் யாழ். மாவட்டத்திற்கென கொழும்பில் காத்திருக்கும் தபால் பொதிகளும் இந்த லொறிகள் திரும்பிவரும்போது எடுத்துவரப்படும். இதற்கான ஒழுங்குகள் யாவும் தபால் மா அதிபருடன் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

25 லொறிகளில் 16 லொறிகளில் அரசாங்கம் வழங்கும் உணவுப் பொருள்களும் 9 லொறிகளில் சர்வோதயம், செஞ்சிலுவைச் சங்கம் போன்ற தொண்டர் ஸ்தாபனங்கள் அகதிகளுக்கு வழங்க இருக்கும் உணவுப் பொருள்களும் எடுத்துவரப்படவிருக்கின்றன. (75)

### இதே நிலை

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

போதே வெளியுறவு அமைச்சர் தன்னிடம் இவ்வாறு கூறியதாக டில்லி சென்று திரும்பியபோது முதல்வர் கருணாநிதி சென்னை விமான நிலையத்தில் வைத்து பத்திரிகையாளரிடம் தெரிவித்தார்.

தமிழ் நாட்டிற்கு நாளாந்தம் வரும் அகதிகளின் எண்ணிக்கைபற்றியும், அவர்களின் நல்வாழ்வு பற்றியும் முதல்வர் மு. கருணாநிதி ஐ. கே. குஜ்ராலுக்கு விளக்கினார்.

இதற்கிடையில் இப் பிரச்சினைக்கு உடன் நடவடிக்கை எடுக்குமாறு காங்கிரஸ் ஐ உறுப்பினர் கறுப்பையா மூப்பனார் தமிழ் நாடு அரசையும், மத்திய அரசையும் கேட்டுக் கொண்டிருக்கின்றார்.

சேவைக் கெனப் புதிதாக வருவிக்கப்பட்ட வலம்புரி மோட்டார்படகு நயினாதீவுக் கடற்படைத் துறைமுகத்தில் பிரயாணிகளுடன் தடுத்து வைக்கப்பட்டது. அதிற் பிரயாணம் செய்தவர்கள் பின்னர் வேறு படகில் பிரயாணம் செய்ய அனுமதிக்கப்பட்டனர், பிரயாணத்தை வேறுபடகில் மேற்கொள்ள ஒழுங்கு செய்தவர்கள் கடற்படையினர் எனவும் அவர்கள் ஒழுங்கு செய்த நயினாதீவு புங்குடுதீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கப் படகினையே நெடுந்தீவுத் துறைமுகத்துள் நுழைந்த போது கடற்படையினர் தாக்கினர் என்பது குறிப்பிடத்தக்கது.

### 4 நாளில்------

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நான்காம் திகதி நிலாவெளி அகதி முகாமில் இருந்து செல்லையா, கணேஸ் ஆகியோரின் குடும்பங்களைச் சேர்ந்த ஆறு பேரையும் இராணுவத்தினர் சுட்டுக்கொன்றுள்ளனர்.

மேலும் பதின் நான்காம் திகதி முறையே 10, 12 வயது சிறுமிகள் இரண்டு பேர் உட்பட ஐந்து பெண்களை நிலாவெளி அகதிமுகாமில் இருந்து சிங்கள ஊர்காவற் படையினரும், இராணுவத்தினருமாகச் சேர்ந்து கைதுசெய்துள்ளனர். இப்பெண்களில் ஒருவர்ஊமை என்பதும் இங்கு குறிப்பிடத் தக்கது. இப்பெண்களில் ஒருவர் பாலியல் வன்முறைக்குட் படுத்தப்பட்டு பின் கொல்லப் பட்டுள்ளார்.

இந்த ஊமைப்பெண்பாலியல் வன்முறைக்குட்படுத்தப்பட்டு உடல்முழுவதும் பலத்தகாயங்களுடன் இரண்டு சிறுமிகளுடனும் தப்பி வந்துள்ளார்.

ஏனைய ஒரு பெண் இராணுவத்திடமே உள்ளார். காயமடைந்த ஊமைப் பெண்ணை செஞ்சிலுவைச் சங்கத்தினர் பார்வையிட்டுள்ளனர். ஆனால் இதுவரை மருத்துவ உதவி எதுவும் அப்பெண்ணுக்குச் செய்யப்படவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

மேலும் பதினைந்தாம் திகதி அன்று கோபாலபுரம் அகதி முகாமிற்குச் சிவிலில் வந்த இராணுவத்தினரும், சிங்கள ஊர்காவற் படையினரும் ஆறு ஆண்களையும், இரண்டு பெண்களையும் கைது செய்து கொண்டு செல்லும் வழியில் ஒருபெண்ணை விடுதலைசெய்துள்ளனர். ஏனையோரைச் சுட்டுக் கொன்றுள்ளனர். சுட்டுக் கொல்லப்பட்டவர்களின் பெயர்கள் வருமாறு:

சூரி, மணியம், மேனன், மோகன், வாசு, நீற்றா ஒருவரின்பெயர்கிடைக்கவில்லை.

இச்சம்பவங்களை அடுத்து அகதி முகாமில் உள்ள மக்கள் பாதுகாப்புத் தேடி வேறிடங்களுக்குச் செல்லத் தொடங்கியுள்ளனர். (ம)

### திருமலையில்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

காயம் அடைந்ததாக தெரிய வந்துள்ளது.

விடுதலைப்புலிகளால் இவர்களிடம் இருந்து ரீ 56-1 ரக துப்பாக்கி ஒன்று, ரீ 56-2 ரக துப்பாக்கி இரண்டு, ரவைகள் முந்நூற்றி அறுபதும், ரவைக் கூடுகள் பன்னிரெண்டும், ஜே. ஆர். கிரனெட் இரண்டும் கைப்பற்றப்பட்டதாகவும் தெரிகின்றது.

அதேவேளை மட்டக்களப்பு கல்லடி பகுதியில் இடம்பெற்ற இன்னுமொரு சம்பவத்தில் இரண்டு இராணுவத்தினர் பலத்த காயமடைந்ததாக சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

## மின்சாரம் இல்லை

(சாவகச்சேரி)

கடந்த ஒரு வாரகாலமாக தென்மராட்சிப் பகுதிக்குமின்சாரம் தடைப்பட்டுள்ளதால் தென்மராட்சிப் பகுதி மக்கள் மண் எண்ணைக்கும் மெழுகுதிரிக்கும் பெரும் பாடாய் அலைவதை எங்கும் காணக் கூடியதாக உள்ளது.

முறை தாக்கிவிட்டுச் சென்று மீண்டும் இரண்டாம்முறை திரும்பி வந்தும் தாக்கின, இதேவேளை ஹெலிக்கொப்ரர் விமானம் அவ்ரோ விமானங்களுக்கு வழிகாட்டிய அதேவேளை ஹெலிக்கொப்ரரில் இருந்தும் பலத்த துப்பாக்கித் தாக்குதல் நடைபெற்றது.

### போராளி வீரமரணம்

இந்த ஹெலிக்கொப்ரர் அவ்ரோ விமானங்களின் தாக்குதல் நடைபெற்ற சமயம் கோட்டை இராணுவத்தின் முன் காவல் கடமையில் ஈடுபட்டிருந்தபோராளி ஒருவரை நோக்கி இராணுவம் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததனைத் தொடர்ந்துஏற்பட்ட மோதலில் ஜிம்பிறவுண் என்பவர் வீரமரணமடைந்தார்.

### சேதவிபரம்

இத்தாக்குதலில் மத்திய நகரப்பகுதியில் அமைந்துள்ள சில கடைப்பேரிகளும் இரண்டாம்குறுக்குத்தெரு, குருநகர் டேவிட் வீதி போன்ற இடங்களில் வீடுகளும் சேதமுற்றுள்ளதை நேரில் பார்க்கக்கூடியதாக உள்ளது. (லோ)


## இடம் மாற்றம்

# ரவி அன் ராஜ் சில்க்ஸ்

77, பெரியகடை வீதியில் இயங்கிவந்த எமது ஸ்தாபனம் தற்போது 84, செட்டித்தெரு ஒழுங்கை நல்லூரில் இடம்மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை எமது வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

(B/1244)



## இடம் மாற்றம்

எமது அன்புக்கினிய தமிழீழ மக்களே!
வாடிக்கையாளரின் நன்மையைக் கருத்தில் கொண்டு எமது புத்தகசாலைகளை ஓட்டுமடம் சந்திக்கு அண்மையில், 682/64, செபஸ்தியார் வீதியில் அமைத்துள்ளோம் என்பதை அன்புடன் அறியத் தருகின்றோம்.

**மக்மிலன் புத்தகசாலை**
ஓட்டுமடம் (சந்திக்கருகாமையில்)
யாழ்ப்பாணம்.

**ஸ்ரீகாந்த் புத்தகசாலை**
ஓட்டுமடம் (சந்திக்கருகாமையில்)
யாழ்ப்பாணம்.

(B.1266)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 17 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது